# இறையியல் கோலங்கள்

வடிவம் 20 | செப்ரெம்பர் 2007 | வண்ணம் 3



# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL

*Tamil Theological Quarterly*


**Vol. : 20**
**No. : 03**
**September : 2007**

**வடிவம் : 20**
**வண்ணம் : 03**
**செப்ரெம்பர் : 2007**

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.

ஆசிரியர் :

அருட்தந்தை : ச. வி. ப. மங்களராஜா

துணை ஆசிரியர் :

அருட்தந்தை : சா. பி. கிருபானந்தன்
அருட்தந்தை : ப. ஜோ. ஜெபரட்ணம்

நிர்வாக குழு :

அருட்சகோ. அ.ஜெ. அ. ஜெயரஞ்சன்
அருட்சகோ. ஆ. மைக் மயூரன்
அருட்சகோ. ஆ. ஜஸ்ரின்
அருட்சகோ. கீ. லக்ஸ்மன்
அருட்சகோ. ப. றெனாட் செறில்நெஸ்
அருட்சகோ. பெ. சதீஸ்குமார்
அருட்சகோ. தி. குயின்சன் பெர்ணான்டோ

வெளியீடு :

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Editor :

**Rev. Fr. S. V. B. Mangalarajah**

Sub Editors :

**Rev. Fr. S. F. Kirupananthan**
**Rev. Fr. P. J. Jebaratnam**

Administrative Board :

**Rev. Bro. A. J.A. Jeyaranjan**
**Rev. Bro. A. Mac Mayooran**
**Rev. Bro. A. Justin**
**Rev. Bro. K. Luxman**
**Rev. Bro. P. Renard Cherilnes**
**Rev. Bro. B. Satheeskumar**
**Rev. Bro. T. Quinson Fernando**

Publication :

**St. Francis Xavier's Seminary,**
**Columbuthurai, Jaffna, Sri Lanka.**

Tel No. : 021 222 2482, 021 222 7145.

# பொருளடக்கம்


01. ஆசிரியரிடம் இருந்து ........

02. திருத்தூதர் தூய பவுல்

*அருட்சகோ. மி. ஜெகன்குமார் அ.ம.தி*

03. பவுலின் தேடல் : பவுலின் "ஆண்டவரே நீர் யார்?" புதுப்பித்தலை நோக்கி

*அருட்தந்தை அ. றொபின்சன் யோசவ்*

04. இயேசுகிறிஸ்து பற்றிய பவுலின் (புரிதல்) மனப்பதிவு

*அருட்சகோ. றொ. றொபின்சன் அ.ம.தி*

05. தூய பவுலின் தலைமைத்துவமும் அவர் கையாண்ட நற்செய்தி அறிவிப்பு வழிமுறைகளும்

*அருட்சகோ. அ. ஜெ. அ. ஜெயரஞ்சன்*

06. பவுலினுடைய இறையியலாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த சிந்தனை மாற்றங்கள்

*அருட்சகோ. ஆ. ஜஸ்ரின்*

07. திருத்தந்தை பேசுகிறார்

08. இவ்விதழின் இறையியலாளர்

– புனித பொயிரியே கில்லறி

*அருட்சகோ. ஜெ. எல்மோ அருள்நேசன்*

09. Synopsis

10. குறுக்கெழுத்துப் போட்டி




# ஆசிரியரிடமிருந்து .....

தமஸ்கு செல்லும் பாதையில் பவுலின் மனமாற்ற நிகழ்வின் போது "ஆண்டவரே ! நீர் யார்?" என்று பவுல் கேள்வி கேட்ட நேரம் தொட்டு, அக்கேள்விக்கான பதிலின் தேடலிலேயே அவர் தனது எஞ்சிய காலத்தை கழித்தார் என்று சொல்ல முடியும்.

இந்த தேடலின் விளைவாகத்தான் ஆரம்பகால திருச்சபையை வழுவின்றி பராமரித்து வழிநடத்த தேவையான போதனைகள் பவுலிடமிருந்து பிறந்தன. அவை திருமுகங்களாக மலர்ந்து இன்றுவரை இறைமக்களுக்கு பக்கபலமாக இருந்து வருகின்றன.

திருச்சபையை துன்புறுத்தும் சவுலாக இருந்த காலத்தில் யூத மதத்தின் மீது கொண்டிருந்த அளவுகடந்த பற்று அல்லது வெளி மனமாற்றமடைந்த பவுலின் வாழ்வு கிறிஸ்துவின் மேலும், கிறிஸ்தவ இறையியலின் மேலும் இடம்பெயர்ந்தது என்று கூறலாம்.

இவ்விதழின் கட்டுரைகள் பவுல் யாரென்பதையும் அவர் அனுபவித்த கிறிஸ்துவையும், அவ் அனுபவத்தின் வெளிப்பாடாக அவர் ஆற்றிய மறைப்பணியையும், இவை அனைத்தினூடாகவும் அவர் பெற்றுக்கொண்ட ஆழமான இறை அனுபவத்திலிருந்து வெளிப்பட்ட இறையியலின் தன்மைகளையும் தாங்கி வெளிவருகின்றன.

பவுல் கேட்ட கேள்வியின் - "ஆண்டவரே நீர் யார்?" - அடிப்படையில் எம் வாழ்வில் புதுமாற்றம் காண விழையும் எமது முயற்சிகளுக்கு அவருடைய வாழ்வும், வார்த்தைகளும் இறையியலும் நிச்சயம் துணை புரியும்.

அருட்திரு. ப. ஜோ. ஜெபரட்ணம்.

# திருத்தூதர் தூய பவுல்

அருட் சகோ. மி. ஜெகன்குமார் அ.ம.தி.

"உண்மையில் என்னைப் பொறுத்தமட்டில், என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப்பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம். இதன் பொருட்டு மற்ற எல்லாவற்றையும் இழப்பாக கருதுகின்றேன். அவர் பொருட்டு நான் அனைத்தையும் இழந்துவிட்டேன். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற்றையும் குப்பை எனக் கருதுகின்றேன்." (பிலிப் 3:8). இந்த வார்த்தைகளுக்கு உரிமையாளர் இயேசு ஆண்டவரின் விசேட திருத்தூதர் தூய பவுல். 19 நூற்றாண்டுகளுக்கு முன் கிறீஸ்துவையும், அவர் மறையையும் தனிமனிதனாக நின்று சற்றும் கலக்கமடையாது, அக்கால உலகின் கடையெல்லை எனக்கருதப்பட்ட உரோமை மாநகரம் வரை பறைசாற்றியவர். கிறீஸ்துவின் திருச்சபையாகிய தூண்களான திருத்தூதர்களுக்கு இணையான இவர் கிறிஸ்துவின் ஆட்கொள்கையினால் உந்தப்பட்டு, தன் வாழ்வின் கடைசி விநாடிவரை ஆண்டவரின் நற்செய்தியை வாழ்வாக்கிக் கொண்டார்.

## பவுலது வாழ்க்கை

### 1.1 இளமைப் பருவமும் கல்வியும்

பவுல் பென்யமின் குலத்தை சேர்ந்த யூதக்குடும்பத்தில் கி.பி. 10ம் ஆண்டளவில் பிறந்தார். இவருடைய யூதப்பெயர் சவுல் (Gk. Saoul, Lt. Saulos- "asked of God") இன்றைய துருக்கி நாட்டின் பகுதியான சிசிலியா மாநிலத்தின் உரோமைக் குடியிருப்பான **"தர்சு"** நகரில் இவரது குடும்பம் வாழ்ந்து வந்தது. செல்வமும் செல்வாக்கும் உரோமைக் குடியுரிமையும் இவர்களுக்கு இருந்தது. அக்கால வழக்கின்படி அனேக யூதர்கள் இருபெயர்களைக் கொண்டிருப்பது வழமை. இவருடைய **"பவுல்"** என்னும் பெயர் மாற்றமும் உரோமை அதிகாரியான

செர்கியூ பவுலுடைய மனமாற்றமும் ஈரொத்த நிகழ்வாகும். (காண். தி.ப.13: 7-12), அதேவேளை பவுல் தன்னுடைய மனமாற்ற வேளையில் பெயர் மாற்றம் பெற்றார். என்பதற்கு ஆதாரம் இல்லை.

புதிய ஏற்பாட்டு திருமுகங்களுள் பல பவுலோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் சில அவரே நேரடியாக எழுதியவை. அவருடைய திருமுகங்கள் வாயிலாகவும், திருத்தூதர் பணி நூல் மூலமாகவும் அவரது வாழ்க்கையைப் ப்ற்றி நாம் அறிய முடியும். ஆனால் திருத்தூதர் பணி நூலின் ஆசிரியர் தூய லூக்காவின் சான்றுகளை பவுலுடைய சொந்த சான்றுகளோடு ஒப்பிட்டு ஆய்வது சற்றுக் கடினம். உ+ம் பவுல் தான் திருச்சபையைத் துன்புறுத்தியதாகக் கூறுகின்றார். ஆனால் தூய ஸ்தேவானுடைய மரணத்துக்கும் அவருக்கும் தொடர்பு உண்டு எனக் கூறவில்லை. பவுல் அரேபியாவுக்கு தப்பி சென்ற நிகழ்வை லூக்கா விவரிக்கவில்லை.

ஆனால் திருத்தூதர் பணி நூலின் ஆசிரியர் தூய லூக்காவின் சான்றுகளை பவுலுடைய சொந்த சான்றுகளோடு ஒப்பிட்டு ஆய்வது சற்றுக் கடினம்.

இஸ்ராயேல் இனத்தை சேர்ந்த இவர் தன்னை கிரேக்க யூதன், எபிரேயன் என அழைக்கின்றார். இதனுடைய அர்த்தமாக கிரேக்கம், அரமேயம் ஆகிய மொழிகளை பேசக்கூடிய யூதர்கள் எனக் கொள்ளலாம். எபிரேய திருவிவிலியத்தை எபிரேயத்தில் வாசிக்க முடிந்த அதேவேளை அதனை கிரேக்கத்திலும் எடுத்துக்காட்ட இவரால் முடிந்தது. இதனால் உலகப் பொது மொழியாகவிருந்த கிரேக்க மொழியை கற்று தெளிந்தார் எனக் கொள்ளலாம். லூக்கா, பவுலை யூதராக காட்டும் அதேவேளை தர்சு நகர, "கில்லோல்" என்பவரது விளக்கங்களைக் வன்மையாகக் கடைப்பிடிக்கும் பரிசேய உறுப்பினராகவும் காட்டுகின்றார். தர்சு நகரம் பேரரசன் <u>**அந்தியோக்கஸ்IV**</u> உடைய கிரேக்க மயமாக்கலினால் வளமிக்க நகரானது.

உரோமை படைத்தளபதி **பொம்பேயின்** மீள் கட்டமைப்பினால் சிசிலிய மாநிலத்தின் தலை நகராகவும் உயர்ந்தது ; பின்னர் இந்நகர வாசிகளுக்கு உரோமைக் குடியுரிமை பேரரசர்கள் **மாக்ஸ் அன்ரனி** மற்றும் **அகஸ்டஸ்** என்பவர்களினால் வழங்கப்பட்டது. ஏதென்சு அலெக்ஸ்சாந்திரியா நகர்களைப் போன்று மெய்யியல் கல்வியில் தர்சு நகரும் சிறந்து விளங்கியது. இங்கே **எப்பிக்கூரியர்களும்** (Epicurians) , ஸ்டொய்க் (Stoics) வாதிகளும் நிலையாக

இருந்தனர். புகழ்பெற்ற உரோமையர்களான **சிசரோ, யூலியஸ் சீசர், அகுஸ்டஸ், மார்க் அன்ரனி, கிளியோபட்ரா** போன்றவர்கள் இங்கே வருகை தந்தனர். இதன் காரணமாகவே பவுல் தன்னை உரோமை குடியுரிமையுள்ளவன் எனக் கூறிப் பெருமை கொண்டார்.

இயேசு வாழ்ந்த காலத்தில் இவர் பாலஸ்தீனத்தில் இருந்திருக்கலாம் எனக் கூற இடமுண்டு, ஆனால் இயேசுவை இவ்வுலக வாழ்வில் சந்தித்ததாக பவுல் குறிப்பிடவில்லை. யூத மறையில் கொண்ட ஆர்வத்தினால் அறிஞர் **கமாலியேல்**I (A.D. - 20-25) என்பவரிடம் கல்வி கற்று ராபி மாணவவராகவும், அங்கிகரிக்கப்பட்டு ஆசிரியராகவும் உயர்ந்தார். யூதமறையில் கொண்ட ஆர்வம் கிறிஸ்தவர்களை துன்புறுத்த இவரைத் தூண்டியது. தலைமைச் சங்க உறுப்பினராகவும் அதன் முழு அனுமதியுடன் தமஸ்கு நகர கிறிஸ்தவர்களை சிறைப்பிடிக்க சென்றார். இவரின் இந்தப் பயணம் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக இருந்தது. கிறிஸ்து சபிக்கப்பட்டவர் எனக் கூறிய அதே பவுல்... எனவே இனி வாழ்பவன் நான் அல்ல ; கிறிஸ்துவே என்னில் வாழ்கின்றார்..... (கலா. 2:20)" எனக் கூறும் அளவிற்கு கிறிஸ்துவினால் ஆட்கொள்ளப்பட்டார்.

## மனம்மாறிய பவுல்

கிறிஸ்தவரான பவுலுக்கு வயது 40 ஆக இருந்திருக்க வேண்டும், ஏனெனில் இவர் திருமணம் முடிக்கவுமில்லை ராபியாக பட்டம் பெறவும் இல்லை, இந் நிகழ்வுகள் நடைபெற ஒரு யூதருக்கு 40 வயதுகள் கடந்திருக்க வேண்டும். மனமாற்றத்தின் போது இவர் கொண்ட "**இயேசு அனுபவம்**" இவர் வாழ்க்கையை மாற்றி "நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு" (1கொரி 9.16b) என்னும் அளவிற்கு கிறிஸ்துவின் உண்மையான சீடனாக மாற்றிக்கொண்டது. பல இன்னல்களை சந்தித்தபோதும், அவருடைய "**அப்போஸ்தலத்துவம்**" கேள்விக்குட்பட்ட போதும் (1கொரி 9:11) இவருடைய இயேசு அனுபவம் (Kyrios) முடிவுவரை தளம்பவில்லை.

புனித சூசையப்பர் குறித்த தொடர் கட்டுரை கடந்தகாலத்தில் வெளிவராமைக்கு வருந்துகின்றோம். அடுத்த இதழ் இக்கட்டுரையைத் தாங்கி வரும்.

~ நிர்வாகக்குழு

பவுலுடைய மறைபரப்புப் பயணங்களை இலக்கமிடுவது புதிய அணுகுமுறை, அது பவுலுடைய சிந்தனைக்குள் வரவில்லை எனலாம். தனது பணியை தொடங்குவதற்கு முன்னர் அரேபியாவுக்கு சென்று தம்மை தயார் செய்து கொண்டார். (கலா 2:7) பின்னர் தமஸ்கு, எருசலேம் பகுதிகளுக்குச் சென்று தம் பணியைத் தொடங்கினார். சிறிய இடைஞ்சல்கள் ஏற்பட்ட போதும் எருசலேம் தாய் திருச்சபையுடன் சுமூகமான உறவை வைத்திருந்தார்.

பவுலுடைய மறைபரப்புப் பயணங்களை இலக்கமிடுவது புதிய அணுகுமுறை. அது பவுலுடைய சிந்தனைக்குள் வரவில்லை எனலாம்.

அந்தியோக்கிய திருச்சபையினால் அபிசேகம் செய்யப்பட்டு பவுல் பர்ணபாவுடன் இணைந்து தம் முதல் நற்செய்தி பயணத்தை கி.பி. 46-48 ஆண்டுகளில் மேற்கொண்டு சைப்பிரசிலும் சின்ன ஆசியாவிலும் திருச்சபையை நிறுவினார் (தி.ப 13;14:2). இவர்களுடைய மறைதூது குழுவில் யோவான் மாற்க்குவும் சில காலம் இருந்தார்.

இந்தப்பயணம் "**சைப்பிரசு**" தீவையும் கடந்து "**பிசிதியா**" மாநிலத்தின் பல நகரங்களை "**கெருபை**" வரை சென்றடைகின்றது. அத்தாலியாவிலிருந்து மத்திய தரைக்கடல் வழியாக அந்தியோக்கியாவை வந்தடைகின்றது. கி.பி 49ம் ஆண்டளவில் எருசலேம் பொதுச் சங்கத்தில் கலந்துகொண்டு, பிற இனத்தவரிடையே தூய ஆவியின் செயல்பற்றி எடுத்துரைத்து தமது பணிக்கு சங்கத்தின் ஒப்புதலைப் பெற்றுக் கொண்டார்.

பவுலுடைய நீதியான நன்னடத்தை திருச்சபையின் தலைமைகளையே கேள்வி கேட்டது "நீர் யூதராய் இருந்தும் யூத முறைப்படி நடவாமல் பிற இனத்தாரின் முறைப்படி நடக்கிறீரே! அப்படியிருக்க பிற இனத்தார் யூத முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென நீர் எப்படி கட்டாயப்படுத்தலாம். ..." (கலா 2:14). இந்த அந்தியோக்கிய நிகழ்வு கி.பி 49ல் நடைபெற்றிருக்க வேண்டும். பவுலுடைய வாதம் பின்னைய நாட்களில் வெற்றி அளித்தது. (தி.ப 15:18-19).

கி.பி 50-52க்கு உட்பட்ட காலத்தில் தமது இரண்டாவது நற்செய்தி பயணத்தை மேற்கொண்டு ஏற்கனவே நிறுவிய சபைகளை வலுப்படுத்தினார். சீலாஸ் இப்பயணத்தில் பவுலுடன் சென்றார். லூக்காவும் இவர்களுடைய குழுவில் இணைந்திருக்க வேண்டும். கடவுளின் வெளிப்பாட்டினால் உந்தப்பட்டு ஆசியாவைத் தாண்டி நெயாப்போலியில் இறைவாக்குரைத்தார். இவ்வாறு ஐரோப்பாவில் முதலாவது திருச்சபை நிறுவப்பட்டது. பின்னர் பிலிப்பியில் தீய ஆவியினால் பீடிக்கப்பட்டிருந்த சிறுமியைக் குணமாக்கியவேளை, அவரின் தலைவரினால் பல இடைஞ்சல்களை சந்தித்தார் (தி.ப 16: 16-20).

அப்பலோனியா ஊடாக, தெசலோனிக்காவை கடந்து பவுல் தன்னுடைய குழுவுடன் ஏதென்சு மாநகரை வந்தடைந்தார். பின்னர் அக்கால பிரசித்தி பெற்ற நகர்களில் ஒன்றான கொரிந்து நகரை வந்தடைந்தார். பேரரசின் முக்கிய நகரான கொரிந்தில் நிறுவப்பட்ட திருச்சபை பின்னாளில் மிக முக்கியமான புறவின திருச்சபையாக மலர்ந்தது. உரோமைய பேரரசினால் வெளியேற்றப்பட்டவர்களான அக்கில்லா, பிரிஸ்கில்லா ஆகியவர்களுடன் 18 மாத காலங்கள் வரை தங்கியிருந்து பணிசெய்த வேளையில், தெசலோனியருக்கு முதலாவது கடிதத்தை எழுதியிருக்க வேண்டும். எபேசு வழியாக எருசலேம் சென்ற பின்னர் அந்தியோக்கியாவை மீண்டும் சென்றடைந்தார் பவுல்.

“யூதர்கள் அரும் அடையாளங்கள் வேண்டும் என்று கேட்கிறார்கள். கிரேக்கர்கள் ஞானத்தை நாடுகின்றார்கள். ஆனால் நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பறைசாற்றுகின்றோம்” (1கொரி 2:22-23). எனக் கூறும் பவுல் கி.பி 53களில் மூன்றாவது பயணத்தை தொடங்கி எபேசை தனது மையமாக்கினார். இங்கிருந்து கொண்டுதான் கலாத்தியர், பிலிப்பியர், பிலமோன் ஆகியவர்களுக்கு கடிதங்களை வரைந்தார், என நம்ப இடமுண்டு. எபேசில் பவுல் சிறைவாசம் அனுபவித்தார் எனவும் மரபு சொல்கின்றது.

கொரிந்திய கிறிஸ்தவர்களின் பல பிரச்சினைகள் பவுலுக்கு கவலை தரவே அவர் கடைசி 5 கடிதங்களையாவது அத்திருச்சபைக்கு எழுதியிருக்கலாம். அவற்றில் இரண்டு மட்டுமே கிடைத்திருக்கின்றது. கொரிந்து நகரில் பிரச்சினைகள் முடிவுக்கு வராமல் போகவே அவர் நேரடியாகவே அத்திருச்சபையை சந்தித்தார். அதுவும் அவருக்கு பலனைத் தரவில்லை. மீண்டும் எபேசுக்கு திரும்பிய பவுல் எபேசிலும் பிரச்சினைகள் வலுவடையவே துரோவா ஊடாக மாசிதோனியாவை அடைகின்றார். தன்னுடைய உண்மைச்சீடன்

தீத்துவிடம் இருந்து கொரிந்தியர்களைப் பற்றிய நல்ல செய்தியைக் கேட்டவராக கொரிந்து திருச்சபையை சந்தித்து அதனை விசுவாசத்தில் ஆழப்படுத்தினார். இதேவேளை பவுலுடைய சிந்தனையிலே உரோமைக்கு சென்று பின்னர் ஸ்பெயின் நாட்டிலும் நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டானது. அக்காயாவில் இருந்தவேளை உரோமையருடைய கடிதத்தினை எழுதினார் என வரலாறு கூறுகின்றது. இறுதியாக மாசிதோனியா சென்று துரோவா ஊடாக மிலேத்து நகரை வந்தடைந்தார். “தமது சொந்த இரத்தத்தினால் தமதாக்கிக் கொண்ட கடவுளின் திருச்சபையை மேய்ப்பதற்குக் கண்காணிப்பாளராக ஏற்படுத்தியுள்ளதால் மந்தை முழுவதையும் கவனமுடன் காத்துக்கொள்ளுங்கள்” (தி.ப 20:28) என்ற பிரபல்யமான இறுதிஉரை எபேசிய மூப்பர்களுக்கு இங்கே உரைக்கப்படுகின்றது. வரவிருக்கும் ஆபத்தை உணர்ந்தவராக கி.பி 58ல் எருசலேம் சென்றடைந்தார்.

## எருசலேமில் சிறைவாசம்

எருசலேம் திருச்சபை தலைவர், யாக்கோபு பவுலை அன்புடன் வரவேற்று எருசலேமில் இருந்த யூத கிறிஸ்தவர்களைக் கவர்ந்திழுக்க பவுலை தூய்மைச்சடங்கு செய்யுமாறு தேவாலயம் செல்லப் பணித்தார். ஆனால் யூதர்களோ ஆலயத்துள் கிரேக்கர்களை கூட்டிவந்தார் என குற்றம் சுமத்தி அவரை கொலை செய்ய முயன்றனர். உரோமைய படைவீரர்களினால் காப்பாற்றப்பட்ட பவுல் தலைமை சங்கத்தின் ஊடாக அன்றைய யூதேயாவின் பொறுப்பாளர் அந்தோனியஸ் பீலிக்ஸீடம் கொண்டுவரப்பட்டார். யூதர்களுடைய வாதங்களை உணர முடியாத பீலிக்ஸ் பவுலிடம் பணத்தை எதிர்பார்த்து இரண்டு வருடம் அவரை சிறையிலேயே பணயம் வைத்தார்.

கி.பி 60 வரை செசாரியாவில் சிறையில் இருந்த பவுல் உரோமை பேரரசர் சீசரே தமது வழக்கை விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு புதிய பொறுப்பாளர் பெர்கியுஸ் பெஸ்டஸின் அனுமதியுடன் உரோமைக்கு அனுப்பப்பட்டார். கி.பி 60களில் சைப்பிரஸ் தீவின் ஊடாக பயணம் செய்த இவர்களின் கப்பல் சேதமடைந்ததால் மால்தா தீவினருக்கு ஆண்டவர் இயேசுவை அறிவிக்கும் வாய்ப்பை பெற்றார். கி.பி. 61 இன் துளிர் காலத்தில் பேரரசின் தலை நகரை அடைந்து இரண்டு ஆண்டுகளாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

அக்கால கலாச்சார உலகின் "கடையெல்லை" என வர்ணிக்கப்பட்ட உரோம் பவுலுடைய பாதங்கள் பட்டு முழு நற்செய்தியை அறிந்து கொண்டது. மேய்ப்புப்பணி கடிதங்களை தீத்து I, II, தீமோத்தேயு போன்றவை பவுல் மீண்டும் மாசிதோனியா, எபேசு மற்றும் கிரேக்கம் போன்ற நகர்களை தரிசித்தார் என எண்ணத் தூண்டுகின்றது. கிரேத்து திருச்சபையின் தலைவராக தீத்துவை நியமித்து, பின்னர் பவுல் தனது இறுதி ஆசைகளையும் மரணத்தின் முன் எழுதினார் என எண்ணத் தோன்றுகின்றது. அவருடைய மரண நிகழ்வுகளை பின்னைய திருச்சபையின் மரபுகளைக் கொண்டே கணிப்பிட வேண்டியுள்ளது. (இம் மரபுகள் அக்கால புனைகதைகளினாலும் ஆதிக்கம் செலுத்தப்பட்டு இருக்கலாம். என்பது ஓர் ஊகம்) "உரோமை கிளமன்ற்" (C.90-100) என்ற ஆயரின் கூற்றுப்படி தூய பவுல் ஸ்பானியாவை தரிசித்தார் எனக் கொள்ளலாம். தந்தை யூசேபியஸ் (+342) எனும் திருச்சபை வரலாற்றாளர் பவுல் நீரோ பேரரசனினால் கொலையுண்டார். அவருடன் தூய பேதுருவும் மறை சாட்சியாக கொலை செய்யப்பட்டார் என கொரிந்திய தியோனிசுவை(C.170) சாட்சியம் காட்டி எழுதியுள்ளார். தந்தை தெர்த்துல்லியன் (C.160) பவுல் சிரைச்சேதம் செய்யப்பட்டு மரணித்தார் என கூறுகின்றார். எவ்வாறு இருப்பினும் கி.பி 68ல் நீரோ மன்னன் இறந்தார். எனவே இதற்கு முன் பவுல் இறந்திருக்க வேண்டும்.

> அவருடைய மரண நிகழ்வுகளை பின்னைய திருச்சபையின் மரபுகளைக் கொண்டே கணிப்பிட வேண்டியுள்ளது.

பவுலுடைய உடல் ஒஸ்டியேன்சஸ் (Via Ostienses) என்னும் வீதியில் தற்போதைய தூய பவுல் பேராலயத்தின் அருகே புதைக்கப்பட்டு (Modern Bascilica of San Paolo Fuori Mura) பின்னர் பழைய இடத்துக்கு மீள் கொண்டுவரப்பட்டது. பேரரசர் கொண்ஸ்டன்ரைன் பேராலயத்தை இங்கே நிர்மாணித்தார்.

"கடந்ததை மறந்துவிட்டு முன்னிருப்பதைக் கண்முன்கொண்டு பரிசுபெற வேண்டிய இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகின்றேன்" (பிலி. 3:14)

## உசாத்துணை நூல்கள்


1. *The New Jerome Bibilical Commentary,* ed Raymond, E, Brown S.S, Theological Publication in India, Bangalore, 1997.

2. *Smith Bible Dictionary,* Com. William Smith, Holman Bible Publishers, Nashrille, 1994.

3. *Dictionary of the Bible,* ed. Mc Kenzie, John L.S.J, ATC. Bangalore, 1983.

4. *The New International Dictionary of the Christian Churches,* ed. Douglas, J.D, The Pater Noster Press, Cape Town, 1978.

5. *Holy Bible (Thiruviviliam - Tamil).* Tamil Nadu Bibilical, Catechetical and Liturgical Centre, Tindivanam, 1995.


***M. Jegan Kumar Coonghe OMI***

## நன்றி கூறி வரவேற்கின்றோம்.

கடந்த காலங்களில் இறையியல் கோலங்கள் வளர்ச்சி அடைவதற்கும் அவை வாசகர்களின் கைகளில் சென்றடைவதற்கும் முழு மூச்சுடன் முன்னின்று உழைத்த உறுப்பினரான அருட்சகோதரர் ஏ. எட்வினாதன் அவர்களுக்கு நன்றி கூறுவதோடு ஆக்கங்களை வழங்கியவர்கள், நிதியுதவி புரிந்தோர், ஆலோசனைகள், விமர்சனங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். அத்தோடு இப்பணியை (நிர்வாக) தொடர்ந்து ஆற்ற ஆர்வத்தோடு தம்மை நிர்வாகக் குழுவில் இணைத்துக் கொண்டவர்களாகிய அருட்சகோதரர்கள் தி. குயின்சன் பெர்ணாண்டோ, பெ. சதீஸ்குமார் ஆகியோரை அன்புடன் வரவேற்கின்றோம்.

# பவுலின் தேடல் : பவுலின் 'ஆண்டவரே நீர் யார்?' புதுப்பித்தலை நோக்கி

அருட்தந்தை அ. றொபின்சன் யோசவ்

## முன்னுரை

"ஆண்டவரே நீர் யார்?" (தி.பணி 9:5) என்று புனித பவுல் தமஸ்குவின் வாயிலில் ஆண்டவர் இயேசுவிடம் கேட்ட அடிப்படை விசுவாசத்தைப் புதுப்பிப்பதற்கான வினா கிறிஸ்தவ விசுவாசத்தைப் புதுப்பிக்க விரும்பும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனக்குள் எழுப்ப வேண்டிய வினாவாகத்தான் உள்ளது. புனித பவுலின் "ஆண்டவரே நீர் யார்? என்ற கேள்வி இயேசுவைப் பற்றிய தனியே முற்று முழுதாக ஓர் அறிவுசார்ந்த தேடலிற்கான கேள்வி அல்ல. அறிவும், ஆற்றலும், வல்லமையும், ஒரு மனிதனைப் புனிதனாக்கி விட முடியாது. இறைவனைப்பற்றிய, இயேசுவைப்பற்றிய, வேதாகமத்தைப் பற்றிய திருச்சபையைப்பற்றிய, திருச்சடங்குகள்பற்றிய.... என்றெல்லாம் இயல்களையும், விடயங்களையும்பற்றிய "அறிவு" என்பது ஒரு கிறிஸ்தவனின் புதுப்பித்தலில் முழுமையான பங்களிப்பை ஆற்றிவிட முடியாது. எனவே புதுப்பித்தலைத் தேடும் ஒரு கிறிஸ்தவன் "ஆண்டவரே நீர் யார்" என்று? எழுப்பும் கேள்வி முற்றாக இயேசுவைப்பற்றிய அறிவார்ந்த தேடலிற்கான ஒரு வினா அல்ல.

> புனித பவுலின் "ஆண்டவரே நீர் யார்? என்ற கேள்வி இயேசுவைப் பற்றிய தனியே முற்று முழுதாக ஓர் அறிவுசார்ந்த தேடலிற்கான கேள்வி அல்ல. அறிவும், ஆற்றலும், வல்லமையும், ஒரு மனிதனைப் புனிதனாக்கி விட முடியாது.

புனித பவுல் திருத்தூதர் தனது அறிவுடமையைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். "நான் அறிவு அற்றவன் அல்ல" (2 கொரி 11:6), திருச்சட்டத்தையும், இறைத்திட்டத்தையும், மறை நூலையும் நிறையவே அறிந்திருக்கின்றேன் என்று தனது திருமுகங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் உறுதிபடவே கூறுவதை நாம் காணமுடிகிறது. கமாலியேல் என்ற திருச்சட்ட நிபுணரான ஒரு பரிசேயனிடம் பவுல் கற்றறிந்த திருச்சட்டம், மறைநூல் சார்ந்த அறிவுவெள்ளம் பவுலின் அனைத்துத் திருமுகங்களிலும் கரைபுரண்டோடுகின்றது. அடிக்கடி சந்தர்ப்பங்களிற்கேற்றால் போல் பழைய ஏற்பாட்டின் சம்பவங்களை பவுல் தமது திருமுகங்களில் மேற்கோள் காட்டுவதில் இருந்து நாம் இதை அறிந்து கொள்ள முடியும்.

## பவுல் இயேசுவை அறியாதவரா?

"ஆண்டவரே நீர் யார்?" என்ற பவுலின் வினாவுக்குள்ளே "இயேசு யார்?" என்ற அடிப்படையான தொடர்ச்சியான பவுலின் உள்ளார்ந்த ஏக்கம் இழையோடுவதை லூக்கா திருத்தூதர் பணி நூலிலே பவுலின் "அடிப்படைத் தேர்வு மாற்ற" சம்பவத்தில் பிரதிபலிக்க விரும்புவதுபோலத் தென்படுகின்றது. பவுல் கடவுள்மேல் ஆர்வம் மிகுந்தவர். கடவுள் ஆபிரகாமிற்கும், மோசேக்கும் கொடுத்த வாக்குறுதி நிறைவேறும் என்ற ஆவலிலே காத்திருந்தவர். அப்படிப்பட்ட ஒரு ஆர்வமிக்க, யாவே இறைவனின் திட்டம் நிறைவேறுவதை எதிர்பார்த்துக் காத்திருந்த ஒரு இஸ்ராயேலன். இயேசுவின் விடயத்தில் தாம் சரியாக இயேசு யார் என்பதை அறிந்தே செயற்பட வேண்டும் என்பதில் ஆர்வமாகவே இருந்திருப்பார் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

கிறிஸ்தவர்களைக் கைது செய்து, இறைத்திட்டத்தினால் உருப்பெற்ற யூதமதத்திற்கு முரணான கிறீஸ்தவத்தை ஆரம்பத்திலேயே நசுக்கிவிட்டு, கடவுளின் திட்டத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்த பவுலிற்கு தாம் இந்த முயற்சியில் தவறி விடுவேனா என்ற ஏக்கம் நிச்சயம் இருந்திருக்கவே வேண்டும். எனவே தான் பவுல் "யேசு யார்" என்ற வினாவை நிச்சயமாக தொடர்ச்சியாகவே அலசி ஆராய்ந்திருப்பார். பவுலின் திருச்சட்ட, மறைநூல் அறிவு இயேசு யார் என்பதை ஏற்கனவே எடைபோட்டதென்பதை திருத்தூதர் பணிநூல், கலாத்தியர் திருமுகம் என்பவற்றில் இருந்து நாம் ஓரளவு அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இயேசு "மரத்தில் தொங்க விடப்பட்டபடியால் சபிக்கப்பட்ட மனிதன்" (கலா 3:13) என்றும் கடவுளின் பிரசன்னம் நிறைந்த தூய ஜெருசலேம் ஆலயத்தையும், கடவுளின் திட்டத்தில்

மோசே கொடுத்த திருச்சட்டத்தையும் இயேசு அழித்துவிடுவார். (திரு. பணி. 6: 13-14) என்றும் இயேசுவைப் பற்றிய தவறான எடைபோடலிற்கு பவுல் உட்பட்டிருந்தார் என்பதை நாம் உறுதிபடக் கூறமுடியும். எனவே தான் பவுல் இயேசு இறைவனின் திட்டத்திற்கு முரணானவர் என்ற கருத்தை தனது அறிவாற்றலின் அடிப்படையில் தேர்ந்து தெளிந்து கிறீஸ்தவத்தை அழிக்க முற்பட்டார். இதன் அடிப்படையில் பவுல் தமது "தேர்வு மாற்றத்திற்கு" முன்பு இயேசுவைப் பற்றிய அறிவைப் பெற்றிருந்தார் என்பதையும் நாம் உறுதிபடக் கூறமுடியும். அத்தோடு இயேசுவின் பகிரங்கப்பணி வாழ்வு, அவருடைய புதுமைகள், போதனைகளையும் பவுல் அறிந்திருப்பார் என்பதையும் நாம் ஊகிக்க முடியும். இருப்பினும் அது ஆய்வுக்குரியதே. மறுபக்கத்தில் வரலாற்று இயேசுவை அவர் சார்ந்திருப்பது என்பது கேள்விக்குரியதே.

மேற்படி சிந்தனைகளில் இருந்து யாவே இறைவனிற்கு மிகவும் அர்ப்பணமான பவுல் இயேசுவின் விடயத்தில் தொடர்ச்சியான "இயேசு யார்?" என்ற மன உளைச்சலிற்கு உட்பட்டிருந்தபோதே தமஸ்குவின் வாயிலில் உயிர்த்த இயேசு பவுலைச் சந்தித்த போது "ஆண்டவரே நீர் யார்?" என்ற உறுதியான கேள்வியைக் கேட்க முடிந்தது. பவுலைப் பொறுத்த வரையில் "ஆண்டவரே நீர் யார்?" என்ற வினா இறை தேடலின் உன்னத பயணத்தில் எழுந்த வாழ்வின் புதிய திருப்பு முனைக்கான வினா. இறை தேடலில், இறை அர்ப்பண பயணத்திலே தான் புதுப்பித்தலிற்கான இத்தகைய ஒரு கேள்வி எழமுடியும். தமஸ்கு நகரத்தின் பெரும் இரைச்சலுக்குள்ளே அமைதியில், செபத்தில், இறைஉறவில், இறைத் தொடர்பில் இருந்த அனனியாவிற்கு பவுலின் இவ்வினா எதிரொலித்ததை திருத்தூதர் பணி ஆசிரியர் சுட்டிக் காட்டுகின்றார். (தி.பணி 9-10) அவ்வாறே தமஸ்குவில் கிறிஸ்துவைச் சந்தித்தபின் குழப்பம், மனப் போராட்டம், பெரும் புயல்களாக எழுகின்ற போதும் இறைவனிடம் ஐக்கியப்பட்டு செபத்தில் நிலைத்துநின்று இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்த பவுலையும் (தி.பணி 9-11) இல் இவ்வாசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். "ஆண்டவரே நீர் யார்?" என்று கேட்டபவுல் இறைவேண்டுதலில் நிலைத்து நின்றே தமது புதுவாழ்வை நிதானித்துக் கொண்டார்.

"ஆண்டவரே நீர் யார்?" என்ற வினா புதுவாழ்விற்கான ஒரு வினா. இந்த நவீன உலகத்தின் மாயைகள், போலிகள், ஆடம்பரங்கள், சுகபோகங்களிற்குள்ளே சிக்கித் தவிக்கும் மனங்களுக்குள்ளே "ஆண்டவரே நீர் யார்?" என்ற வினா எழுவது மிகவும் அரிதாகவே இருக்கும். அப்படி

எழுந்தாலும் லூக்கா தி.பணி 9-11இல் குறிப்பிடும் இறைவேண்டலிலும், இறைவனோடு ஐக்கியப்பட்ட நெருங்கிய, தியான செபத்திலும் தான் இவ்வினாவிற்கான விடை தேடப்படவேண்டும்.

## பவுலின் புதுப்பித்தல்

> இயேசுவை செபத்திலும், வாழ்விலும், பணியாலும் அனுபவித்துப் பெறும் "ஒப்பற்ற செல்வம்" எனக் கொள்தலே பவுலின் "ஆண்டவரே நீர் யார்?" என்ற வினாவிற்கான புதுப்பித்தல் பதில்.

பவுலின் புதுப்பித்தல், புதுவாழ்வு என்பது நீண்டதொரு ஆய்வு. பவுலின் நீண்ட பயணங்களுக்குள்ளே பவுலின் புதிய வாழ்வின் காலடிகள் பதிந்துள்ளன. பவுலின் புதுவாழ்வு என்பது ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல "ஆண்டவரே நீர் யார்?" என்ற ஓர் அறிவுத் தேடல் அல்ல. தேடிய அறிவெல்லாம் குப்பை எனக்கருதி இயேசுவை செபத்திலும், வாழ்விலும், பணியாலும் அனுபவித்துப் பெறும் "ஒப்பற்ற செல்வம்" எனக் கொள்தலே பவுலின் "ஆண்டவரே நீர் யார்?" என்ற வினாவிற்கான புதுப்பித்தல் பதில்.

அடிப்படையில் வாழ்வு முழுவதும் உயிர்த்த கிறிஸ்துவைச் சந்தித்தலே எனப் பவுல் குறிப்பிடுகின்றார். "மெசியாவாகிய இயேசுவைத் தவிர, அதுவும் சிலுவையில் அறையப்பட்ட அவரைத் தவிர, வேறு எதையும் அறிய வேண்டும் என்று நினைக்கவில்லை" என்பதையே கூறுகின்றார். 1 கொரி 2-2 புதுப்பித்தலிற்கு அடிப்படையானது. "மனித ஞானம் அல்ல கடவுளின் வல்லமையே" என்பதைக் கூறுவதன் மூலம் நமது புதுப்பித்தலுக்கும் உயிர்த்த கிறிஸ்துவின் வல்லமையே அடிப்படை என்பதைக் கூறுகின்றார்.

பவுலின் புதுவாழ்வு மட்டுமல்ல இயேசுவின் சீடர்களின் புரட்சிகரமான புதுவாழ்வும் கூட உயிர்த்த இயேசுவைச் சந்தித்ததிலேயே உருவாகியது. சிலவேளையில் புதுவாழ்வு என்பது வரலாற்று இயேசுவை அறிதல் என்ற மாயைக்குள் நாம் வீழ்ந்துவிடும் ஆபத்து எமக்கு இருக்கிறது. வரலாற்று இயேசுவை அறிதல் அல்லது சந்தித்தல் நமது புதுப்பித்தலிற்கு உந்துதலானது என்பதில் எதுவித ஐயமுமில்லை. பவுல் வரலாற்று இயேசுவை சந்தித்தாரா? அல்லது வரலாற்று இயேசுவைப்பற்றி அறிந்திருந்தாரா? என்பது நிச்சயம் ஆய்வுக்குரியது. இருப்பினும் பவுல் முழுக்க முழுக்க உயிர்த்த இயேவைத் தாம் சந்தித்தமை பற்றியும், நம் புதுவாழ்விற்கு அடிப்படையானது "இயேசு உயிர்த்தார்" என்பதையுமே அடிக்கடி கூறுகிறார் 1 கொரி 15:4-8 பகுதியில் இயேசு கடவுளால் உயிருடன் எழுப்பப்பட்டார் என்பதை உறுதிபடக் கூறுகிறார். முதலில் கேபாவுக்கும் அதன்பின் பன்னிருவருக்கும் பின்பு ஐநூற்றிற்கும்

மேற்பட்டோருக்கும் ஒரே நேரத்தில் தோன்றினார் என்றும் இறுதியில் கடையனாகிய தனக்கும் தோன்றினார் என்றும் கூறுகின்றார்.

நற்செய்தியாளர்கள் தமது நற்செய்திகளின் முடிவில் கூறவருவதுபோல் ஏனைய சீடர்களும் கூட இயேசுவின் மரணத்தின்பின் தம் பழைய வாழ்விற்குத் திரும்பிவிட்டார்கள் என்றும் உயிர்த்த இயேசுவின் சந்திப்பின் பின்பே அவர்கள் புதுவாழ்வை ஆரம்பித்தார்கள் என்றும் நாம் கூற முடியும். எனவே பவுலின் புதுவாழ்வு உயிர்த்த இயேசுவின் சந்திப்பிலேயே ஆரம்பமாகியது. “ஆண்டவரே நீர் யார்?” என்ற வினா முந்த முந்த அடிப்படையில் உயிர்த்த இயேசுவைப்பற்றிய அனுபவத்தையே தேடும் வினாவாக இருக்கின்றது. பவுலைப் பொறுத்தவரை வரலாற்று இயேசுவை அறியும் அவா அவரிடம் இருந்ததாக திருமுகங்களில் தெரியவில்லை. மாறாக ஏனைய சீடர்களைப் போல இயேசுவின் உயிர்ப்பிற்கே முதன்மை அளிக்கின்றார். எனவே “ஆண்டவரே நீர் யார்?” என்ற கிறிஸ்தவர்களின் புதுப்பித்தல் என்பது செபத்திலும், இறை அனுபவத்திலும், அர்ப்பண வாழ்விலுமே அடிப்படையில் உயிர்த்த இயேசுவைச் சந்திக்கும் அழைப்பாக இருக்கின்றது. அதைத் தொடர்ந்தே வரலாற்று இயேசுவைத் தேடும் வினாவாக அமைய வேண்டும். “ஆண்டவரே நீர் யார்?” என்ற வினாவிற்கு வரலாற்று இயேசுவை மட்டும் தேடும் தேடலாக அமைந்து விட்டால் புதுப்பித்தல் என்பது சாத்தியமாகுமா? என்ற ஐயப்பாடே எழுகிறது.

பவுல் “ஆண்டவரே நீர் யார்?” என்று உயிர்த்த இயேசுவைக் கேட்ட வினாவும் அதற்கான அவரது தேடல்களும் புதுப்பித்தலை விரும்பும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் முந்த முந்த உயிர்த்த இயேசுவையே வாழ்வில் தேடி அனுபவிக்க வேண்டும் என்ற அழைப்பையே விடுக்கிறது. ஆதிக்கிறிஸ்தவர்களின் அனுபவத்தைப் போன்றே புதுப்பித்தலை விரும்பும் ஒவ்வொருவரும் உயிர்த்த இயேசுவின் அனுபவத்தில் இருந்தே வரலாற்று இயேசுவைப் பற்றிய தேடலில் “ஆண்டவரே நீர் யார்?” என்று கேட்க வேண்டும் என்பதைப் பவுல் பாடமாகத் தருகிறார்.

> புதுப்பித்தலை விரும்பும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் முந்த முந்த உயிர்த்த இயேசுவையே வாழ்வில் தேடி அனுபவிக்க வேண்டும்

**உசாத்துணை**

*பரிசுத்த வேதாகமம் - புதிய மொழிபெயர்ப்பு*

# இயேசு கிறிஸ்து பற்றிய பவுலின் (புரிதல்) மனப்பதிவு

அருட்சகோ. றொ. றொபின்சன் அ.ம.தி

| | |
|---|---|
| பெயர் | :- சவுல் - யூதப்பெயர்<br>பவுல் (பவுலுஸ்) கிரேக்க பட்டபெயர் அர்த்தம் "குள்ளன்" |
| பிறந்த காலம் | :- கி.மு. 10 , கி.பி. 69 |
| பேசிய மொழி | :- அரமேயம் , கிரேக்கம் |
| கல்வி | :- கிரேக்க ஏடுகளை தர்சிலும், ஜெருசலேமில் புகழ்பெற்ற சட்ட வல்லுனரான கமாலியேலிடம், வேத நூலையும் நன்கு பயின்றவர். நுணுக்கமாக யூத சட்டத்தைக் கடைப்பிடித்த பரிசேயர். |

இயேசு; பன்முகப்பட்ட புரிதலுக்கு உட்பட்டவர். பலர் தவறாகவும், சிலர் சுயநல ஆதாயத்திற்காகவும், இன்னும் சிலர் கருத்தாதிக்கத்திற்காகவும், இவ்வாறு தமக்கு சாதகமாக இயேசுவைப்பற்றிய புரிதலை திரிபுபடுத்தி வாழும் காலம் இது. இந் நிலையில் பவுல் என்ற வித்தியாசமான வரலாற்று மனிதன், இயேசுவை உணர்ந்த, புரிந்த விதம் பற்றி சற்று நோக்குவது அவசியமானது.

ஆண்டவர் இயேசுவுக்கு அடுத்தபடியாக இளந் திருச்சபையில் அதிக செல்வாக்கு பெற்றிருந்தவர் தூய பவுல் என்றால் அது மிகையாகாது. அவருக்கு "வேற்றினத்தாரின் திருத்தூதர்" "பதின்மூன்றாம் திருத்தூதர்", "திருத்தூதர்களில் பேராசிரியர்": "ஐந்தாம் நற்செய்தியாளர்", "முதல் இறையியலாளர்", "கிறிஸ்தவ மறையின் (இரண்டாம்) நிறுவுனர்", "மறை ஞானி" என்றெல்லாம் பல சிறப்புப் பெயர்கள் உண்டு.

அதே நேரத்தில் "எதிர் கிறிஸ்து" "போலித் திருத்தூதர்" "இயேசுவின் எளிமையான நற்செய்தியை திரித்து வழங்கியவர்". "பெண்களின் எதிரி" எனவும் அவர் வருணிக்கப்படுகிறார். இதிலிருந்து பவுல் பன்முகம் கொண்டவர் என்னும் உண்மை தெளிவாகிறது.

➤ பவுல் ஒரு வரையறைக்கும், முறைமைகளுக்கும் உட்பட்ட இறையியலாளன் அல்ல. நூலகத்திலிருந்து தர்க்கரீதியாக இயேசுவை பற்றிய புரிதலை வளர்த்துக் கொண்டவரும் அல்ல பவுல். வெறுமனே சிந்தனையாலும், உட்கிடையான முடிவுகளாலும் இயேசுவைப் புரிந்து கொண்டவரும் அல்ல. மாறாக அதிகமாக அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு இயேசுவைப் பற்றிய புரிதலை வளர்த்துக் கொண்டவர். மனித மூளைக்கும், நுண்ணறிவுக்கும் தீனிபோட்டு திருப்திப்படுத்தக்கூடிய இறையியலை அவர் உருவாக்கியவரல்ல.

வெறுமனே சிந்தனையாலும், உட்கிடையான முடிவுகளாலும் இயேசுவைப் புரிந்து கொண்டவரும் அல்ல. மாறாக அதிகமாக அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு இயேசுவைப் பற்றிய புரிதலை வளர்த்துக் கொண்டவர்.

➤ பவுலின் நம்பிக்கையில் தேக்கநிலை இருந்ததில்லை. என்றும் மாறிவரும் மனிதவாழ்வியல், சூழமைவு நீரோட்டத்திற்கு முகம் கொடுத்தவர் பவுல். சூழ்நிலைகளை மாற்றுவதிலும், உருவாக்குவதிலும் ஈடுபட்டுழைத்தவர். வித்தியாசமான கருத்துலகிற்கும், சிந்தனைக்கும், பேதங்களுக்கும், தன்னை பொருத்தமுடையவராக்கி அவ்வழி சென்று தன் "இயேசு அனுபவத்தை" எடுத்துக் கூறினார். நிறுவன மயப்படுத்தப்பட்ட திருச்சபையின் இருப்பிற்கு முன் வாழ்ந்து தடம் பதித்தவர் பவுல். மாற்றங்களுக்கும், புதிய சூழ்நிலைகளுக்கும் ஏற்ற விதத்தில் புதிய உண்மைகளை, புதையல்களை பெறுதற்கரிய கிறிஸ்து அனுபவத்திலிருந்து எடுத்தவர் பவுல். மாற்றங்களை

மாற்றங்களுக்கும், புதிய சூழ்நிலைகளுக்கும் ஏற்ற விதத்தில் புதிய உண்மைகளை, புதையல்களை பெறுதற்கரிய கிறிஸ்து அனுபவத்திலிருந்து எடுத்தவர் பவுல்.

மனதில் கொண்டு மறுக்க முடியாத உண்மைகளுக்கு மாறுபட்ட வடிவங்கள் கொடுத்தவர். புரிய, புரிய, புதிய பரிமாணங்கள் இயேசுவில் ஊற்றெடுப்பதைக் கண்டவர் பவுல்.

## கிறிஸ்துவில் தடுத்தாட் கொள்ளப் பெற்றவர்.

பவுல் வரலாற்று இயேசுவைப் பார்த்திருக்க கூடும்; ஆனால் யூத சட்டத்தை எதிர்த்தவராக, தம் எதிரியாக அவரைக் கருதி இருக்க வேண்டும்; ஏனெனில் அவர் திருச்சட்டத்தை மிகவும் போற்றி வந்தார். திருச்சட்டம் விதிக்கும் செயல்களால் மட்டுமே மாந்தர் இறைவனுக்கு ஏற்புடையோர் ஆக முடியும், மீட்பை அடைய முடியும் என்று நம்பியிருந்தார்.

இக்கட்டத்தில் பவுலுக்கும் உயிர்த்த கிறிஸ்துவுக்கும் இடையே நிகழ்ந்த சந்திப்பு அவருக்கு தன்னிகரில்லா ஓர் அனுபவமாய் அமைந்தது. இது பற்றிய விளக்கம் திருத்தூதர் பணிகளில் மும்முறை இடம் பெறுகிறது (தி.ப 9:1-19 ; 22:3-21; 26:12-18). இச்சந்திப்பு அவரது வாழ்வை முற்றிலும் மாற்றியமைத்து விட்ட ஓர் நிகழ்ச்சி ஆகும். சிலுவையில் அறையப்பெற்ற கிறிஸ்து இன்றும் உயிரோடு வாழ்கிறார். அவரே ஆண்டவர், மீட்பின், வாழ்வின் ஊற்று, அவர் இறைவனால் சபிக்கப்பட்டவர் அல்ல. மாறாக திருச்சட்டத்தை நிறைவு செய்தவர். இதனால் கிறிஸ்துவோடு உறவு கொள்வதை மட்டும் ஒப்பற்ற செல்வமாகக் கருதினார்.

## இயேசு கிறிஸ்து பற்றி

கிறிஸ்து என்னும் வார்த்தையை இயேசு என்னும் மனிதருக்கு புனித பவுல் ஏற்றிச் சொல்கிறார். இதைப் பறைச்சாற்றவும் செய்கிறார். பவுல் தன் எழுத்துக்களில் இயேசுவைப்பற்றி மிகக் குறைவான செய்திகளையே தருகிறார் இயேசு ஒரு யூதர், ஆபிரகாம் வழி வந்தவர் (கலா. 3:16). தாவீதின் தலைமுறையைச் சார்ந்தவர் (உரோ 1:3). இஸ்ராயேலர் (உரோ 9:5). பெண்ணிடம் பிறந்தவர் (கலா 4:4). அவருக்கு சகோதரர்கள் உண்டு (1 கொரி 9:5). யூதர்கள் மத்தியில் இயேசு ஊழியம் செய்தார் (உரோ 15:18). சிலுவையில் அறையப்பட்டு (1கொரி 2:8).

> கிறிஸ்து என்னும் வார்த்தையை இயேசு என்னும் மனிதருக்கு புனித பவுல் ஏற்றிச் சொல்கிறார்.

இறந்து அடக்கம் செய்யப்பட்டார் (1கொரி 8:11; 15:4). என இயேசுவைப் பற்றி தனது பதிவுகளை எழுதியுள்ளார்.

மேலும் கிறிஸ்து முன்பே இருக்கிறவர் (பிலி 2:6). கடவுள் தம் மகனை உலகிற்கு அனுப்பினார் (கலா 4:4 ; உரோ 8:3-4). அவர் இறுதி உணவை ஏற்படுத்தினார் (1 கொரி 11:23-26). சிலுவையில் இறந்து அடக்கம் செய்யப்பட்டு உயிருடன் எழுப்பப்பட்டார் (1தெச 1:10). கடவுள் அவரை உயர்த்தினார் (பிலி 2:9). ஆண்டவருடைய நாளில் அவர் வானின் நின்று வருவார் 1தெச 4:16 : 1கொரி 13:23). அனைத்தையும் தமது ஆளுகைக்கு கீழே கொண்டு வருவார் (1கொரி 15:24 பிலி 2:10-11). விண்ணரசை கடவுளிடம் ஒப்படைப்பார் (1கொரி 15:24). இவை அனைத்தும் கடவுளின் ஒரே திட்டமாகும். இயேசு கிறிஸ்துவில் கடவுள் செய்த, செய்கிறதுமான, அனைத்துமே முழுமையான மீட்பின் திட்டமாகும்.

எனினும், புனித பவுலின் போதனையில் கிறிஸ்தவைப்பற்றி மிகவும் ஆழமானதும், அழுத்தம் அதிகம் கொண்டதுமான சிந்தனைகளை இரண்டு நிலைகளில் பார்க்கலாம்.

1. கடவுள் தம் திருமகனை அனுப்புதல் (கலா 4:4, உரோ 8:3-4).
2. இயேசு கிறிஸ்துவின் இறப்பு

**இயேசுவின் இறப்பை பவுல் மூன்று கோணங்களில் பார்க்கிறார்.**

☞ இயேசுவின் இறப்பு கடவுளின் திருவுளத்திற்கு முற்றிலும் பணிந்த நிகழ்வு ஆகும் (உரோ 5:19 : பிலி 2:8).

☞ இயேசுவின் இறப்பு நமது பாவங்களுக்குப் பரிகாரமான ஒரு தியாகப் பலியாகும் (உரோ 3:25, 1கொரி 12:24, கலாத் 1:4, உரோ 4:25 , 6:10).

☞ இயேசுவின் இறப்பு ஒரு மீட்புச் செயலாகும். (கொரி 6:20, கலா 3:13 ; 4:5 1கொரி 7:23)

கிறிஸ்துவில் நிகழ்ந்த அனைத்தும் கடவுளின் செயலாகும் (1கொரி 5:19). ஆகவே புனித பவுலைப் பொறுத்தமட்டில் நற்செய்தி என்பது கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவை பறைசாற்றுதலாகும். மனித குலத்தின்

நன்மைக்காக கடவுள் தம் திருமகனை அனுப்பியுள்ளார். அதன் விளைவு சிலுவைச் சாவிலும் மீட்பாய் முகிழ்ந்தது. ஆகவே மனுக்குலம் விடுதலை அடைந்தது (1தெச 1:10). ஒப்புரவு கண்டது (உரோ 5:1-11). பாவம் தோற்கடிக்கப்பட்டது (உரோ 6:11). புதுவாழ்வு புலர்ந்துள்ளது (கலா 4:5, உரோ 6:4-11). கிறிஸ்துவுக்காக வாழும் முறை கனிந்துள்ளது (2 கொரி 5:14-15 , உரோ 7:4). உயிர்ப்பில் பங்கு பெற எதிர்காலம் காத்திருக்கிறது (1 தெச 4:14 உரோ 6:5).

> மனித குலத்தின் நன்மைக்காக கடவுள் தம் திருமகனை அனுப்பியுள்ளார். அதன் விளைவு சிலுவைச் சாவிலும் மீட்பாய் முகிழ்ந்தது.

## முடிவுரை

புனித பவுலின் வாழ்வு கிறிஸ்துவில் மையம் கொண்டிருந்தது. வாழ்வின் ஒவ்வோர் அசைவிலும் ஏன் வாழ்வு முழுவதுமே கிறிஸ்துவோடு என்ற தொடரை தொடர்பு படுத்திக் காட்டுகின்றார். சுருங்கச் சொல்ல வேண்டுமெனில் கிறிஸ்துவில் ஒரு மனிதன் புதிய படைப்பாய் ஆகும் புதுமையை வெளிப்படுத்த "கிறிஸ்துவில்" என்னும் இச்சொற்றொடர் புனித பவுலால் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. (2 கொரி 5:17 1கொரி 1:30, 1தெச 3:8).

## உசாத்துணை


1. William Barclay, The mind of Paul, Fontana books, London, 1963.
2. Francis Pereira S.J, Gripped by God in Christ, St. Pauls, 2005.
3. தியாகு (ed), விவிலியக்களஞ்சியம், 4 Vols. Vol, IV, சென்னை : Hi - Tech. Offset Printers, 1992, PP. 446 - 454.
4. பிலிப்ஸ். இ. இயேசுதாசன் அ.ம.தி, பரிசுத்த ஏடுகளைக் கற்றல், கிறிஸ்தவம் I, பிராவி அழுத்தகம், கண்டி, 2002.
5. விவிலிய விருந்து செப்ரெம்பர் 2007.

# தூய பவுலின் தலைமைத்துவமும் அவர் கையாண்ட நற்செய்தி அறிவிப்பு வழிமுறைகளும்

அருட்சகோ. அ. ஜெ. அ. ஜெயரஞ்சன்

## முன்னுரை

தூய பவுல் பென்யமின் குலத்தைச் சேர்ந்த யூதக் குடும்பத்தில் கி.பி 10ஆம் ஆண்டளவில் பிறந்தார். இவரது யூதப்பெயர் சவுல் இன்றைய துருக்கி நாட்டின் பகுதியான சிலிசியா மாநிலத்தின் உரோமைக் குடியிருப்பான தர்சு நகரத்தில் இவரது குடும்பம் வாழ்ந்து வந்தது. செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்த இவரது குடும்பத்திற்கு உரோமைக் குடியுரிமையும் இருந்தது.

பெருமை மிக்க நகரில் பிறந்து, சட்டம் படித்து, எபிரேயன், பரிசேயன் என்ற சமூக உயர் நிலைகளில் வாழ்ந்து, மகிழ்வாய்க் காலந்தள்ளியவர். இவரைத்தான் தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில் கிறிஸ்து தடுத்து ஆட்கொண்டார். பிற இனத்தவருக்கு நற்செய்தி அறிவிக்கும் திருத்தூதராகத் தம்மை கிறிஸ்து அழைப்பதை உணர்ந்து கொண்டு தம்மை அர்ப்பணித்தார். சமயப்பற்றும், சட்டப்பற்றும் மிக்கவராக இருந்த சவுல் மனம்மாறிய பின் கடவுளின் பேரருளைப் பறைசாற்றம் ஆர்வமிக்க திருத்தூதர் ஆனார்.

> பிற இனத்தவருக்கு நற்செய்தி அறிவிக்கும் திருத்தூதராகத் தம்மை கிறிஸ்து அழைப்பதை உணர்ந்து கொண்டு தம்மை அர்ப்பணித்தார்.

இயேசு என்ற ஒப்பற்ற செல்வத்தைத் தனதாக்கிக் கொள்ள இனம், சாதி, உயர்நிலை, கௌரவம், வசதி, வாய்ப்பு, செல்வம் அனைத்தையும் குப்பையெனக் கருதி இயேசு என்ற ஆவியில் பிற இனத்தவருக்கு நற்செய்தியை அறிவிக்க மூன்று தூதுரைப் பயணங்களை மேற்கொண்டார். இந்த தூதுரைப் பயணங்களிலும் அவரது நற்செய்திப் போதனையிலும் அவர் எடுத்தாண்ட

தலைமைத்துவத்தையும், தனக்கே தனித்துவமான முறையிலே பின்பற்றிய பணிவழிமுறைகளையும் சுருக்கமாக ஆராய இக்கட்டுரையூடாக முற்படுகிறேன். இவருடைய வாழ்வும், பணியும் கிறிஸ்தவர்களாகிய எமக்கும் சவால்தானே.

## தலைமைத்துவமும் நற்செய்தி அறிவிப்பு வழிமுறைகளும்

1. தூய பவுல் தனது சிறப்பான அழைத்தலில் உறுதியான நம்பிக்கையும், தனக்கு கொடுக்கப்பட்ட விசேடமான பணியாற்றிய தெளிவையும் கொண்டிருந்தார்.

2. தன்னை முழுமையாக இறைசித்தத்திற்கு அர்ப்பணித்திருந்தமை தூய ஆவியானவரின் வழிநடத்தலுக்கும், ஏவுதலுக்கும் எப்பொழுதும் செவிகொடுத்து அதற்கேற்ப தனது பணிகளை மேற்கொண்டார்.

3. எல்லோருக்கும் முன்மாதிரிகையான, நேர்மையான, எடுத்துக்காட்டான வாழ்க்கையை வாழ்ந்தவர்.

4. இவர் எப்பொழுதும் ஜெருசலேம் திருச்சபையோடும், (தாய்த்திருச்சபை) தான் நிறுவிய திருச்சபைகளோடும் நல்லுறவைக் கொண்டிருந்தார்.

5. ஒவ்வொரு பயணத்தின் முடிவிலும் ஜெருசலேம் சென்று தனது பணிபற்றியும், தான் மேற்கொண்ட வேலைகள் பற்றிய விடயங்களையும், அறிக்கைகளையும் தாய் திருச்சபையிடம் சமர்ப்பித்தார். பணியின் போது எதிர்கொள்ளவேண்டிய பிரச்சினைகள், சவால்களைத் தாய் திருச்சபையிடம் தொடர்பு கொள்வதனூடாக அதனிடமிருந்து ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் பெற்று அதற்கேற்ப சுமூகமான முறையிலே தீர்த்துக் கொண்டார்.

6. தான் சென்ற இடங்களிலெல்லாம் சிறிய திருச்சபைகளை (Local Churches) உருவாக்கினார். உருவாக்கிய திருச்சபையோடும், தாய் திருச்சபையோடும் நெருங்கிய உறவு கொண்டிருந்தார். இதனால் தாய் திருச்சபைமட்டிலே சிறிய திருச்சபைகள் கொண்டிருக்க வேண்டிய பொறுப்புக்கள், கடமைகள் பற்றி அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார்.

7. உரோமை சாம்பிராச்சியத்தின் நான்கு பிரதான நிலப்பகுதிகளுக்கு தனது பணியை மட்டுப்படுத்தியிருந்தார். சீரியா, கலாத்தியா, ஆசியா, அகாயா இந்த பெரு நிலப்பகுதிகளினுடைய நகரங்களிலும், பட்டணங்களிலும் மட்டுமே நற்செய்தியைப் போதித்தார். ஏனென்றால் தான் இவ்விடங்களிலே போதித்தவை கடைசியில் கிராமங்களையும் சென்றடையும் என்பது இவருடைய நம்பிக்கையாகவும் உறுதிப்பாடாகவும் இருந்தது.

8. இவர் தமது தாபரிப்புக்காக எவரிலுமே தங்கியிருக்கவில்லை. தனது சொந்த கையினால் தனது ஜீவனோபாயத்திற்காக உழைத்தார். நகரங்களிலும், பட்டணங்களிலும் நற்செய்தியை எடுத்தியம்பியதனால் தனக்கென வேலையை தேடிக்கொள்வது எப்பொழுதும் இவருக்கு இலகுவாக இருந்தது.

**தனது சொந்த கையினால் தனது ஜீவனோபாயத்திற்காக உழைத்தார். நகரங்களிலும், பட்டணங்களிலும் நற்செய்தியை எடுத்தியம்பியதனால் தனக்கென வேலையை தேடிக்கொள்வது எப்பொழுதும் இவருக்கு இலகுவாக இருந்தது.**

9. தானே தனக்குரிய வேலையைத் தேடிக் கொண்டமையால் மக்களுடனும் தொழிலாளர்களுடனும் இலகுவாக தொடர்பு கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. இதனால் இவர்களுடைய மனநிலை, சூழல், பிரச்சினைகளை அறிந்து கொள்ளக்கூடியவராக இருந்தார். இதனால் அவர்களுக்கு ஏற்றமுறையிலே அவர்களின் சூழமைவுக்கு ஏற்ப நற்செய்தியின் விழுமியங்களை கொடுக்கக் கூடியதாக இருந்தது.

10. நல்ல ஆயன் இயேசுவைப்போல் மக்களை தேடிச்சென்றார். மக்கள் தம்மை தேடிவரவேண்டும் என்று இவர் காத்திருக்கவில்லை சிறப்பாக மக்கள் ஒன்று கூடுகின்ற இடங்களான செபக்கூடங்கள், கடற்கரை ஓரங்கள், போன்ற இடங்களைத் தேடிச்சென்றார். எங்கெல்லாம், எப்பொழுதெல்லாம் சந்தர்ப்பம் கிடைத்ததோ அவற்றையெல்லாம் பயன்படுத்தி நற்செய்தியைப்

**நல்ல ஆயன் இயேசுவைப்போல் மக்களை தேடிச்சென்றார். மக்கள் தம்மை தேடிவரவேண்டும் என்று இவர் காத்திருக்கவில்லை.**

போதித்தார். சிறப்பாக வீடுகள், சந்தைவெளிகள், வேலைத்தளங்கள், செபக்கூடங்களில் போதித்தார். எங்கு சென்றாலும் முதலில் யூதர்களுக்கு நற்செய்தியை எடுத்துரைத்தார். அவர்கள் ஏற்றுக்கொள்ள, நம்பிக்கைகொள்ள மறுத்தபோது புற இனத்தவர்களுக்கு போதித்தார்.

11. தோல்விகள், கஸ்ரங்கள், எதிர்ப்புக்களைக் கண்டு சோர்ந்து போகவில்லை, உறுதியை இழந்து போகவுமில்லை. கடவுள் தன்னுடன் இருக்கிறார். அவரது பணியையை நான் செய்கின்றேன். என்ற முழுமையான மனஉறுதியுடன் தனது பணியைத் தொடர்ந்தார்.

> தோல்விகள், கஸ்ரங்கள், எதிர்ப்புக்களைக் கண்டு சோர்ந்து போகவில்லை, உறுதியை இழந்து போகவுமில்லை.

12. தனது பணியில் தன்னை மக்களுக்கும் அவர்களின் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு மாற்றி இசைவாக்கிக்கொண்டார். இவர் யூதர்களுக்கு ஒரு யூதனாகவும், கிரேக்கர்களுக்கு ஒரு கிரேக்கனாகவும் பிற இனத்தவருக்கு ஒரு பிற இனத்தவனாகவும், எல்லாத்திற்கும் எல்லாமாகவும் தன்னை மாற்றிக்கொண்டார். யூதர்களுக்கு போதித்தபோது அவர்களுடைய வேதாகமத்திலிருந்து எடுத்துக்காட்டுக்களுடனும், கிரேக்கர்களுக்கு அவர்களின் கவிஞர்கள், மெய்யியலாளர்களின் சிந்தனையின் எடுத்துக்காட்டுக்களுடனும் போதித்தார். நற்செய்திக்காக எதையுமே, ஏன் தனது உயிரையுமே இழப்பதற்குக் கூட ஆயத்தமாக இருந்தார்.

> **எல்லாத்திற்கும் எல்லாமாகவும் தன்னை மாற்றிக்கொண்டார்.**

13. இவர் தனது தூதுரைப் பயணங்களை தனியாக மேற்கொள்ளவில்லை எப்பொழுதுமே இரண்டு அல்லது மூன்று பேரை உடன் உழைப்பாளர்களாக அல்லது தோழர்களாக தன்னோடு கூட்டிச்சென்றார். சென்ற இடங்களிலெல்லாம் அங்குள்ள மற்ற ஆண்களையும், பெண்களையும் தனது பணியில் இணைத்துச் செயற்பட்டார். இதனால் அவர்களுக்கும் இந்த மறைபரப்பு அப்போஸ்தலத்தில் பங்குகொள்ள சந்தர்ப்பம் கொடுத்தார். இவர்களை தனது உடன்பணியாளர்கள் அல்லது உடன் உழைப்பாளர்கள் என அழைத்தார். இதனால் இவரின் பணியிலே ஒரு கூட்டு தலைமைத்துவத்தைக் காணக்கூடியதாகவுள்ளது.

14. இவரின் போதனையை ஏற்றுக்கொண்டு கிறிஸ்து இயேசுவில் நம்பிக்கை கொண்டோருக்கு உடனடியாக திருமுழுக்குக் கொடுத்தார். பின்பு அவர்களை சிறிய சபைகளாக நிறுவி அவர்கள் தாம் பெற்றுக்கொண்ட விசுவாசத்தை வாழத்தொடங்கும் வரை அவர்களோடே தங்கியிருந்தார். அவர்களுக்குள்ளே குருக்களையும், மூப்பர்களையும் நியமித்து அம்மக்களின் விசுவாசத்தை பாதுகாத்து வளர்க்கவேண்டிய பொறுப்பை அவர்களிடம் கொடுத்தார். அதன்பின்பே அவ்விடயங்களை விட்டுச் சென்றார். சந்தர்ப்பம் கிடைத்தபோது தாம் நிறுவிய சபைகளைப் போய்ப் பார்த்து, கிறிஸ்தவ நம்பிக்கையில் திடப்படுத்தும் தமது மேய்ப்புப் பணியைத் தொடர்ந்து ஆற்றினார். தாம் செல்லமுடியாத இடங்களுக்கு உடன் பணியாளர்களை அனுப்பினார், அம்மக்களுக்கு பல திருமுகங்களைச் சுற்றறிக்கை மடல்களாக அனுப்பி விசுவாசத்தில் வளர உற்சாகப்படுத்தினார்.

15. தூய பவுலின் தலைமைத்துவத்தை சிறப்பாக அவர் கப்பலிலே உரோமைக்கு செல்லும்போது அவரில் காணக்கூடியதாகவுள்ளது. தூய பவுலும் கைதியாகவே பயணம் செய்தார். தன்னுடன் உரோமைக்கு பயணம் செய்த பயணிகளுடனும், கைதிகளுடனும், அவர்களுக்கும் பொறுப்பாயிருந்த நூற்றுவத்தலைவனிடத்திலும் நன்மதிப்பைப் பெற்று நல்லுறவை வளர்த்திருந்தார். தன்னுடன் பயணம் செய்தவர்களின் நலனிலும், பாதுகாப்பிலும் கூடிய கவனம் கொண்டிருந்தார். இந்தக் கடல்பயணம் ஆபத்துக்கள் இல்லாமல் சேரவேண்டிய இடத்தை போய் சேருவதற்கு தன்னாலான எல்லா உதவிகளையும் செய்தார். கப்பல் நடுக்கடலிலே எதிர்க்காற்றுக்கும் புயலுக்கும் உள்ளாகியது. பயணம் செய்தோர் இனித் தப்பிப் பிழைப்போம் என்னும் எதிர்நோக்கை இழந்தனர். பல நாளாகக் கப்பலில் இருந்தோர் உணவருந்தாமல் கூட இருந்தார்கள். அப்போது தூய பவுல் அவர்களை மனவுறுதியுடன் இருக்கும்படியும் உங்கள் உயிருக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது ஏனெனில் கடவுள் எங்களை கைவிடமாட்டார் என்று கூறி அவர்களுக்கு நம்பிக்கையளித்தார். கிட்டத்தட்ட இரண்டு வாரங்களாக எதுவும் உண்ணாமலிருந்தவர்களை உணவினை உண்ணும்படி வற்புறுத்தி தானே முன்னின்று வழிநடத்தினார். மாலுமிகள் பயணிகளை விட்டுவிட்டு தப்பிக்க முயன்றபோது அவர்களை போகவேண்டாம் என நூற்றுவத்தலைவன் மூலம் கேட்டுக்கொண்டார்.

கப்பல் நீரடி மணல் திட்டையில் மோதியது. கப்பலின் முன்பகுதி புதைந்து அசையாமல் இருந்தது. பின்பகுதி அலைகளின் வேகத்தால் உடைந்து போயிற்று. எனவே கைதிகளில் எவருமே நீந்தித் தப்பிவிடக்கூடாதென்று படைவீரர்கள் கொல்லதிட்டமிட்டனர். ஆனால் நூற்றுவத்தலைவர் பவுலைக் காப்பாற்ற விரும்பி அந்த திட்டத்தை நிறைவேற்றவிடவில்லை.

இறுதியாக மால்தா தீவில் கரைசேர்ந்த பின் தன்னுடன் பயணித்தவர்கள் குளிர் காய்ந்து கொள்ள விறகினைப் பொறுக்கி நெருப்புமூட்டி உதவி செய்தார். ஏனெனில் அவர்கள் அங்கு போய்ச் சேர்ந்தபோது மழைபெய்து குளிராக இருந்தது. அங்கு நோய்வாய்ப்பட்டிருந்தவர்களைக் குணமாக்கினார். இவ்வாறு ஒரு சிறந்த தலைவராக அந்த பயணத்தின் போது செயற்பட்டதை திருத்தூதர் பணி 27/1-28/10 வரையுள்ள வாக்கியங்களிலே காணக்கூடியதாகவுள்ளது.

## முடிவுரை

திருத்தூதர் பணி நூலைப்படிக்கின்ற போதும், தூய பவுலின் திருமுகங்களை வாசிக்கின்ற போதும் என்மனதிலே எழுந்த அவருடைய தலைமைத்துவ பண்புகளையும் தூதுரைப்பயணத்தின் போது அவர் கையாண்ட வழிமுறைகளையும் சுருக்கமாக கூறிப்பிட்டுள்ளேன். இவருடைய வாழ்வும் பணியும் எங்கள் ஒவ்வொருவரினுடைய வாழ்வுக்கும் சவாலாக அமைகின்றது.

> இவருடைய வாழ்வும் பணியும் எங்கள் ஒவ்வொருவரினுடைய வாழ்வுக்கும் சவாலாக அமைகின்றது.

இறைவாக்கினர்களைப்போல, இறைவன் தன்னையும் தாயின் வயிற்றில் உருவாகும் போதே அழைத்தார் என்று உணர்ந்த பவுல், தன்னையும் பிற இனத்தவர்கள் இயேசுவின் நற்செய்தியைப் பெற முழுமையாக அர்ப்பணித்தது போல நாமும் எம்மையும் அர்ப்பணிப்போம். இறையாட்சி இம்மணிலே மலர உழைப்போம் !!!

## துணைநின்ற நூல்கள்

திருவிவிலியம் (பொது மொழிபெயர்ப்பு)
விவிலிய விருந்து, ஜனவரி 2007
விவிலிய விருந்து, மார்ச் 2007
விவிலிய விருந்து, மே 2007
Class notes on Acts of the Apostles given by Rev. Fr. Jesuthasan OMI.

# பவுலினுடைய இறையியலாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த சிந்தனை மாற்றங்கள்

அருட்சகோ. ஆ. ஜஸ்ரின்

பவுலினுடைய இறையியலை நாம் ஒருசில கட்டுரைகளுடாக முழுமையாக அறிந்துவிட முடியாது. எனவே அவருடைய இறையியலாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த சில சிந்தனை நாம் அறிவதனூடாக ஓரளவாவது நாம் பவுலினுடைய இறையியலை அறிந்து கொள்ள முடியும். இதனடிப்படையில் நாம் பின்வருகின்ற சில தலைப்புக்களில் பவுலினுடைய இறையியலாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த சிந்தனை மாற்றங்களை எடுத்து நோக்குவோம்.

## சிலுவையில் அறையுண்ட இயேசு, உயிர்த்து ஆண்டவரும் மெசியாவுமானார்.

தமஸ்கு அனுபவம் சிலுவையில் அறையப்பட்டு இறந்த இயேசு இப்பொழுது வாதிக்க முடியாதபடிக்கு இறைவனின் வல்லமையால் உயிருடன் இருக்கின்றார் என்பதை பவுலுக்கு உணர்த்தியது. பவுல் வாழுகின்ற, உயர்த்தப்பட்ட ஒரு நபரோடு வாழ்வதாக உறவாடுவதாக உணர்ந்தார். அந்த நபர் சிலுவையில் அறையுண்டு மரித்து உயிர்த்த நாசரேத்தூர் இயேசுவைத் தவிர வேறுயாருமல்ல. கிறிஸ்துவின் உயிர்ப்பில் நம்பிக்கை கொண்ட படியால் உடலின் உயிர்ப்பு எனும் உண்மையில் பவுலின் நம்பிக்கையும், எதிர்நோக்கும்

> புலன்களால் உணரமுடியாத இறைவன் உயிர்த்த இயேசுவின் வடிவில் கண்ணால்காணக் கூடியவராகினார் என்று பவுல் நம்பிக்கை கொண்டார். இதனாலேயே பவுல் எப்பொழுதும் உயிர்த்த இயேசுவை ஆண்டவர் என்று சொல்லக்கூடியவராக இருந்தார்.

சிறப்பாக நிலைநிறுத்தப்படுகின்றது. (தி.பணி 23:6 ; 26:6-8). பவுல் உயிர்த்த இயேசுவை இறைமகிமையுடன் கண்டார். திருவிவிலியத்தில் இறைமகிமை என்பது இறைவனையே குறித்துநிற்பதை நாம் காண்கின்றோம். (வி.ப 33:20ff) புலன்களால் உணரமுடியாத இறைவன் உயிர்த்த இயேசுவின் வடிவில் கண்ணால்காணக் கூடியவராகினார் என்று பவுல் நம்பிக்கை கொண்டார். இதனாலேயே பவுல் எப்பொழுதும் உயிர்த்த இயேசுவை ஆண்டவர் என்று சொல்லக்கூடியவராக இருந்தார். மேலும் பவுல் சந்தித்த உயிர்த்த இயேசு முழுமையாக மாற்றமடைந்த, உயிர்த்த நிலையில், முழுமையாகி வேறு தன்மையில், ஆவியின் தன்மை கொண்ட மனிதராகக் காணப்பட்டார். விவிலிய வார்த்தையில் இயேசு, "தெய்வீக உடலைக்" கொண்டவராகக் காணப்பட்டார். அதாவது தெய்வீக, முழுமையாக இறை ஆவியால் நிரப்பப்பட்ட மனிதராக, அவரில் விசுவாசம் கொள்பவர்களுக்கு இறை ஆவியை அல்லது இறை வாழ்வைக் கொடுக்கக் கூடியவராக இயேசு காணப்பட்டார். இவ்வாறு இயேசு வாழ்வளிக்கும் ஆவியாக இருப்பதாக தி.பணி 9:17ல் பவுல் கூறுகிறார். உயிர்த்த இயேசு தன்னைப் பாவத்தில் இருந்து விடுவித்ததால் அவரை மெசியாவாகக் காண்கின்றார் பவுல் தி.பணி. 2: 26-28. இவ்வாறு பவுல் தான் அழிக்கத் தேடிய மறையைப் போதிக்கின்றார். இயேசுவை ஆண்டவர் என்றும் மெசியா என்றும் எடுத்துரைக்கின்றார் (கலா 1:23).

## வரவிருக்கும் நாள் வந்துவிட்டது

தூய ஆவியை உயிர்த்த கிறிஸ்து பவுல்மீது பொழிந்ததால் பவுல் வரவிருக்கும் நாள் அல்லது புதிய யுகம் ஏற்கனவே வந்துவிட்டது என்பதை அறிந்து கொண்டார். இது பவுலுக்கு மீட்பு வரலாற்றிலே புதியதொரு பார்வையைக் கொடுத்தது. ஒரு பரிசேயரான பவுல் ஈடுபாட்டுடனும் நம்பிக்கையுடனும் தற்போதைய தீமையின் யுகத்தில் இறைவனின் தலையீடு வரும் என்று எதிர்பார்த்திருந்தார். இது ஆண்டவருடைய நாளில் அதாவது இறைவன் தீமையை வெல்லும் நாளில் இடம்பெறும் எனப் பவுல்

> **தூய ஆவியை உயிர்த்த கிறிஸ்து பவுல்மீது பொழிந்ததால் பவுல் வரவிருக்கும் நாள் அல்லது புதிய யுகம் ஏற்கனவே வந்துவிட்டது என்பதை அறிந்து கொண்டார். இது பவுலுக்கு மீட்பு வரலாற்றிலே புதியதொரு பார்வையைக் கொடுத்தது.**

காத்திருந்தார். இப் புதிய யுகத்தில் தூய ஆவியானவர் மக்கள் மேல் பொழியப்பட்டு, மக்கள் இறவாமையைப் பெற்று, விண்ணகவாழ்வைப் பெறுவர் என பவுலும் நம்பினார். ஆனால் இப்பொழுது "கிறிஸ்து – நிகழ்வால்" அதாவது கிறீஸ்துவின் மரணம், உயிர்ப்பு என்பவற்றால் இறைவன் உலகில் கிறீஸ்து வழியாகச் செயற்படுகின்றார். சிறப்பாகக் கிறீஸ்துவின் இறப்பு மற்றும் உயிர்ப்பு தீய சக்திகள், பாவம், சாவு என்பன தோற்கடிக்கப்பட்ட காரணமாய் இருந்தது என்பதை பவுல் உளமார நம்பினார். வேறு வார்த்தையில் கூற வேண்டுமானால் நம்பிக்கை கொண்டோர்க்குப் புதியயுகம் பிறந்துள்ளது (1கொரி 10:11). இந்தப் புதிய யுகமானது அல்லது அதன் வருகையானது கிறீஸ்து இயேசுவின் இரண்டாம் வருகையிலேயே முழுமை அடைகின்றது.

## ஏற்புடைமையாதல் இறைவிசுவாசத்தினால் கிடைக்கும் இலவசக் கொடை

பரிசேயரான பவுல் திருச்சட்டத்தை சரிவரக் கடைப்பிடிப்பதாலேயே மீட்புக் கிடைக்கும் என்று வாழ்க்கை வாழ்ந்த ஒருவராவார். நல்ல செயல்களிலும், முயற்சிகளிலேயுமே மீட்புத் தங்கியுள்ளது என அவர் நினைத்தார். ஆனால் தமஸ்கு அனுபவத்திலே மீட்பு என்பது இறைசெயல் இதற்கு மனிதனின் நற்செயல்கள் தனியே தேவையாகாது என்று உணர்ந்தார். உயிர்த்த இயேசு பவுலை ஆட்கொண்டபோது "ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டும்" எனக்கேட்ட பவுலின் கேள்வி அவரது நம்பிக்கையைக் காட்டும் கேள்வியாக அமைந்ததோடு, அவர் தன்னை முழுமையாக இறைவனுக்கு ஒப்படைப்பதையும் சுட்டி நிற்கின்றது. இவ்வாறு பவுல் பாவ மன்னிப்பையும் (22:16).

> உயிர்த்த இயேசு பவுலை ஆட்கொண்டபோது "ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டும்" எனக்கேட்ட பவுலின் கேள்வி அவரது நம்பிக்கையைக் காட்டும் கேள்வியாக அமைந்ததோடு, அவர் தன்னை முழுமையாக இறைவனுக்கு ஒப்படைப்பதையும் சுட்டி நிற்கின்றது.

தூய ஆவியின் கொடைகளையும் பெற்றார். (9:17), இதனால் இறைவனுக்கு ஏற்புடையவரானார். ஏற்புடைமை (மீட்பு, பாவமன்னிப்பு, தூய ஆவியின் கொடைகள்) என்பன திருச்சட்டத்தை அப்பழுக்கின்றி கடைப்பிடிப்பதால் மட்டும்

வந்ததல்ல மாறாக இறைவனால் பவுல் தன்னை முழுமையாக இறைவனுக்கு ஒப்புக்கொடுத்ததற்காக இலவசமாகக் கொடுக்கப்பட்ட கொடையாகும்.

## நற்செய்தி பிற இனத்தாருக்கும் உரித்தானது

மீட்பு என்பது சட்டத்தினைக் கடைப்பிடிப்பதால் மட்டும் அல்ல மாறாக இறைநம்பிக்கையால் கிடைப்பது என்றால் அது சட்டம் என்னும் எல்லைக்குள் உட்படாத மக்களுக்கும் (பிற இனத்தாருக்கும்) உரித்தானது என்று பவுல் உணர்ந்து கொண்டார். எனவே தான் பவுல் கிறீஸ்துவின் அருள் என்பது யூதருக்கும் அதே வேளையில் பிற இனத்தாருக்கும் உரித்தானது என்று போதித்தார். இறைவனால் வழங்கப்பட்ட கட்டளைக்கு இணங்க பவுலின் பணியும், போதனையும் பெரும்பாலும் பிற இனத்தாருக்கே உரியதாக இருந்தது. இதனால்தான் இவர் தன்னைப் பெருமையுடன் "பிற இனத்தவரின் திருத்தூதர்" என்று அழைத்தார் (உரோ 11:13).

இறைவனால் வழங்கப்பட்ட கட்டளைக்கு இணங்க பவுலின் பணியும், போதனையும் பெரும்பாலும் பிற இனத்தாருக்கே உரியதாக இருந்தது.

## கிறீஸ்துவின் சிலுவையின் பொருள்

தமஸ்கு அனுபவத்திற்கு முன்பு சிலுவை என்பது பவுலுக்கு அவமானத்தின் சின்னமாகவும், தடைக்கல்லாகவும் காணப்பட்டது. ஏனெனில் சிலுவையில் தொங்கியவர் இறைவனால் சபிக்கப்பட்டவர் என்று கூறப்பட்டத்தை பவுல் முழுமையாக ஏற்றுக்கொண்டார். ஆனால் உயிர்த்த மகிமையுள்ள இயேசுவைச் சந்தித்த பின்பு சிலுவை என்பது இறைவனின் திட்டத்தில் முழுமானிடத்திற்குமான மீட்பின் கருவி என்பதைப் புரிந்து கொண்டார். பாவம் எதையும் அறியாத இயேசு தனது பாவத்திற்காக அல்ல மாறாக முழு மனுக்குலத்தின் பாவத்திற்காகவும் சிலுவையிலே தொங்கினார். யூதரும் பிற இனத்தவரும் தங்களுடைய பாவத்தின் நிமித்தம் இறைவன் முன் தகுதியற்றவர்களாகக் காணப்பட்டனர். இயேசு பாவப்பட்ட மனுக்குலத்தைத் தன்னோடு அடையாளப்படுத்திக் கொண்டார். கிறீஸ்து சிலுவையில் தொங்கி

மனிதரின் சாபத்தைத் தன்மேல் ஏற்றார். சட்டத்தின் சாபத்தில் இருந்து மனிதரை மீட்க கிறீஸ்து எமக்காக ஒரு சாபமாக மாறினார். சிலுவையில் தொங்கிய இயேசு இறைதந்தையின் பாவத்திற்கான விட்டுக்கொடுக்க முடியாத "இல்லை" என்பதன் அடையாளமாகக் காணப்பட்டார். முன்பு பவுலுக்கு அவமரியாதைக் குரிய, வெட்கத்துக்குரியதாகத் தோன்றிய சிலுவையானது இறைவல்லமையினதும் ஞானத்தினதும் அடையாளமாக மாறியது.

யூதரும் பிற இனத்தவரும் தங்களுடைய பாவத்தின் நிமித்தம் இறைவன் முன் தகுதியற்றவர்களாகக் காணப்பட்டனர். இயேசு பாவப்பட்ட மனுக்குலத்தைத் தன்னோடு அடையாளப்படுத்திக் கொண்டார்.

## திருச்சபை கிறிஸ்துவின் உடலாகும்

உயிர்த்த கிறீஸ்து "சவுலே, சவுலே நீ ஏன் என்னைத் துன்புறுத்துகின்றாய்? எனப் பவுலிடம் கேட்டார். இதனூடாக இறைவன், கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதினூடாக நீ என்னையே துன்புறுத்துகிறாய் என உணரும் படியே இப்படிக் கேள்வி கேட்டார் எனப் பவுல் அறிந்து கொண்டார். வேறு விதமாய் கூறின் இயேசு தன்னைத் தனது சீடர்களோடு அடையாளப்படுத்தினார் என்று கூறலாம். இவ் அடையாளப்படுத்தல் பவுலின் திருச்சபை கிறீஸ்துவின் உடல் என்னும் புரிதலுக்கு அடிப்படையாய் அமைகின்றது. பவுலினுடைய தமஸ்கு அனுபவமானது பலஸ்தீனத்திற்கு வெளியே இடம் பெற்றதால் இறைவார்த்தை இஸ்ராயேலர்க்கு மட்டும் உரித்தான சொத்து என்பது கேள்விக்குரியதாய் மாறியது.

பவுலினுடைய தமஸ்கு அனுபவமானது பலஸ்தீனத்திற்கு வெளியே இடம் பெற்றதால் இறைவார்த்தை இஸ்ராயேலர்க்கு மட்டும் உரித்தான சொத்து என்பது கேள்விக்குரியதாய் மாறியது.

## பிற இனத்தாரின் திருத்தூதனாகக் கிடைத்த மறைத்தூது அனுபவங்கள்

பவுலினுடைய இறையியல் வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைவது அவரது ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் மறைத்தூதுப் பணியின் அனுபவங்களேயாகும். தமஸ்கு அனுபவமானது பவுலது ஆன்மீகப் பயணத்திலே ஒரு திருப்புமுனையாக அமைந்தது. பவுலது பயணம் அல்லது பணி தமஸ்கு அனுபவத்தோடு முடியாத படியால் இது ஒரு திருப்பு முனையாகவே அமைகின்றது. இந்த அனுபவம் பவுலை பிற இனத்தவரின் திருத்தூதராக, கிறீஸ்தவக் குழுமங்களின் ஸ்தாபகராக, இவற்றிலும் முதன்மையாக முதலாவது கிறீஸ்தவ இறையியலாளராக்கியது. தனது போதனையாலும், குழுமங்களை நிறுவுவதாலும், திருமடல்களை எழுதுவதாலும் பவுல் தனது இறையியலிலும், கிறீஸ்து பற்றிய அறிவிலும் பவுல் வளா்ந்தாா். சிதறடிக்கப்பட்டு பல நகரங்களில் வாழும் யூதா்களிடையேயும், பிற இனத்தாரிடமும் இருந்த தொடர்பும் அனுபவமும் இவருடைய கிறீஸ்தவத்தைக் குறித்த சிந்தனையில் ஆதிக்கம் செலுத்தவும் தவறவில்லை.

> பவுலது பயணம் அல்லது பணி தமஸ்கு அனுபவத்தோடு முடியாத படியால் இது ஒரு திருப்பு முனையாகவே அமைகின்றது.

இவ்வாறாகப் பவுலினுடைய இறையியலாக்கத்திற்கு மேற்கூறப்பட்ட விடயங்கள் அல்லது நிகழ்வுகள் அடிப்படைக் காரணிகளாய் அமைந்தன. பவுலினுடைய கடிதங்களை வாசிக்கின்ற ஒருவா் இச்சிந்தனைகளையும் மனதிலே கொண்டு, அவருடைய இறையியலைப் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு மேற்கூறப்பட்ட விடயங்களும் துணையாக, உதவியாக அமையும் என நம்புகின்றேன்.

## உசாத்துணை


William Barclay, The mind of Paul, Fontana books, London, 1963.

திருவிவிலியம், பொது மொழிபெயர்ப்பு

Class notes on Acts of the Apostles by. Rev. Fr. Jesuthasan OMI.

# திருத்தந்தை பேசுகிறார்

இளையோரின் கேள்விகளுக்கு திருத்தந்தையின் பதில்

**இளைஞன் :-** சேரிகளில் வாழும் எங்களில் பலருக்கு எங்களோடு அடையாளப்படுத்த ஒரு நிலையமோ இடமோ மக்களோ இல்லை. நாங்கள் வரலாறோ, எதிர்காலமோ, நோக்கமோ அற்று இருக்கின்றோம். நாங்கள் எதிர்பார்ப்பது எப்பொழுதும் நடப்பதே இல்லை. இந்த நேரங்களில் தனிமையும், சார்ந்திருத்தலும், தவிர்க்க முடியாதுள்ளது. இப்படிப்பட்ட நிலையில் நாங்கள் வேண்டப்படுபவர்களாக மாற வழி ஏதும் உண்டோ?

**திருத்தந்தை :-** உமது வினாவிற்கும் இன்றைய சூழ்நிலை பற்றிய உமது விளக்கத்திற்கும் நன்றி. பல்வேறுபட்ட பிரச்சனைகள் உள்ள இந்த உலகத்தின் போக்குகளுக்கு பதிலளிப்பது என்பது எப்பொழுதும் இலகுவானதல்ல. அத்தோடு நாம் அனைத்தையும் ஒரு நேர்முக நோக்கோடு பார்த்து வாழ்வதற்கு விரும்புவதில்லை. இருப்பினும் மறுபக்கத்தில் நாம் துணிவோடு முன்னோக்கிச்செல்ல வேண்டும்.

ஆகவே நான் எனது பதிலுனுடைய மூலத்தை சொல்கின்றேன். ஆம், இன்று நம்பிக்கை இருக்கின்றது. நீங்கள் ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள் ஏனென்றால் நீங்கள் ஒவ்வொருவரும் கடவுளால் அறியப்பட்டிருக்கின்றீர்கள், விரும்பப்பட்டிருக்கின்றீர்கள். உங்கள் ஒவ்வொருவருக்கும் கடவுள் தனது திட்டத்தை வைத்திருக்கின்றார். அத்திட்டத்தை கண்டுபிடித்து அதற்கு பதிலளிப்பது எமது கடமையும் பொறுப்புமாகும். அப்போதுதான் இவ்வாறான நிச்சயமற்ற தன்மைகள், ஓரங்கட்டப்பட்ட சூழ்நிலைகள் மத்தியில் கடவுள் எமக்கு வைத்திருக்கின்ற திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.

எவ்வாறாயினும் இதைப்பற்றி விபரமாகச் சொல்வதற்கு நீங்கள் எமக்கு ஒரு சமூகத்தின் உண்மையான சூழ்நிலைபற்றி விபரித்திருக்கின்றீர்கள். இவ்வாறானதொரு சூழ்நிலையில் நாம் முன்னோக்கி நகர்வது என்பது கடினமானதொரு விடயமாகத்தான் தோன்றுகின்றது. அத்தோடு உலகையும் ஒரு நல்லநிலைக்கு மாற்றுவதென்பதும் கடினமாகத்தான் தோன்றுகின்றது. அனைத்துமே உலகின் பெரும் சக்திகளான பொருளாதாரத்திலும் அரசியலிலும் மையம் கொண்டிருக்கின்றது. பெரும் பிரபுக்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். அடிமட்டத்தில் உள்ளவர்கள் இவற்றிலிருந்து புறம் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறான புறந்தள்ளலானது சமுதாயத்தின் முக்கிய அம்சமான குடும்பத்தை மிகவும் பாதிக்கின்றது. குடும்பமானது தலைமுறையினர் சந்திக்கும் இடமாக விளங்குகின்றது. குடும்பமானது வெறும் தலைமுறையினர் இடமாக மட்டும் இருக்கக் கூடாது. மாறாக வாழ்க்கையை எப்படி வாழ்வது என்று கற்கின்ற இடமாகவும் நல்ல பண்புகளை பயிலுகின்ற இடமாகவும் இருக்க வேண்டும்.

திருச்சபையின் முக்கிய அம்சமாகிய பங்கும் ஒரு தூண்டுதலின் இடமாகவும், ஒற்றுமையின் இடமாகவும் திகழ்கின்றது. பங்கு மக்களை ஒன்று சேர்க்கின்ற இடமாக திகழ்கின்றது.

எங்கே திருப்பலி நிறைவேற்றப்படுகின்றதோ, எங்கே திவ்விய நற்கருணைப் பேழை இருக்கின்றதோ அங்கே கிறிஸ்து இருக்கின்றார். எனவே கிறிஸ்து எனும் இந்த மையத்தில்தான் நாம் எம்மால் இயலுமான காரியங்களை ஓரங்கட்டப்படும் நிலைகளுக்கு எதிரானவைகளை செய்ய வேண்டும். வாழும் திருச்சபை, சிறு சிறு குழுமங்களின் திருச்சபை, பங்குத்திருச்சபை, என்பன பல வேறாக நிலையங்களை உருவாக்கி தீர்க்க முடியாது இருக்கின்ற அரசியல் பிரச்சனைகளுக்கும் பெரும் வல்லமையாகக் காட்டப்படும் அதிகாரத்தின் மத்தியிலும் தற்போதைய சமூகம் எதிர்நோக்கும் ஒற்றுமை, சட்டத்தின்பால் ஈடுபாடு, முன்னெடுப்பு, புதுப்படைப்பு என்பவற்றுக்கு உதவ வேண்டும்.

சொல்வதிலும் செய்வது கடினம் என்பது எனக்குத் தெரியும், ஆனால் நான் இங்கு காண்கையில் பலர் நம்பிக்கையை அதிகரிக்கவும் பல நிலையங்களின் தொகையைக் கூட்டவும் உழைக்கின்றனர். இதனால் நாம் நமது முன்னெடுப்பை கொண்டு செல்ல வேண்டும் என எனக்குத் தோன்றுகின்றது. திருச்சபையானது கட்டாயம் சேரிகளிலே பிரசன்னமாக இருக்க வேண்டும். கிறிஸ்து அங்கே இருக்க வேண்டும் அத்தோடு உலகின் மையமே இங்குதான் காணப்பட வேண்டும்.

நாங்கள் ஏற்கனவே பார்த்தோம், இன்னும் இறைவார்த்தையில் காண்கின்றோம் கடவுளுக்கு பரிசுத்தபூமி என ஒன்று இல்லை என்று. பெரிய உரோமை சாம்ராட்சியத்திலே ஒரு துரும்புபோல இருந்த நாசரேத்து என்பது ஒர் அறியப்படாத இடமாக இருந்தது ஆனாலும் அதன் சூழ்நிலையால் அது உலகையே மாற்றும் ஒரு மையமாக மாறியது எனவே நாமும் நம்பிக்கைக்கான எதிர்நோக்கிற்கான, அன்பிற்கான, ஒற்றுமைக்கான, நீதிக்கான, சட்டத்திற்கான நிலையங்களை உருவாக்க வேண்டும்.

இந்த வழியில் தான் தற்போதைய நவீன சமூகம் தப்பிப்பிழைக்க முடியும். இதற்கு எந்தவிதமான நம்பிக்கையும் இல்லாதபோதும் மையங்களை உருவாக்குவதற்கு உறுதி தேவை. நாங்கள் இந்த சூழ்நிலையில் ஒற்றுமையுடன் ஒத்துழைக்க வேண்டும். இதன்மூலம் பெண்களும், ஆண்களும் ஒத்துழைப்புடன் வாழ முடியும். நாம் காணும் இந்த உலகு மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதை இளைஞரே செய்ய முடியும். நாம் இதை எமது சொந்தத் திறமையால் செய்யமுடியாது. மாறாக விசுவாசத்தில் ஒன்றிணைந்து ஒன்றாகப் பயணிப்பதன் மூலமே செய்யமுடியும்.

இறைவனின் அன்னையுடன், புனிதர்கள், இயேசுக் கிறிஸ்துவுடனும் இணைந்து நாம் முக்கியமானவற்றைச் செய்ய முடியும். நான் உங்களை உற்சாகப்படுத்துவதுடன் கிறிஸ்துவிலும் இறைவனிலும் நம்பிக்கை கொள்ள வரவேற்கின்றேன். "நான் வரலாற்றின் முழுமைக்கு முக்கியமானவன்" என்று நீங்கள் ஒவ்வொருவரும் இதைக் கைக்கொள்ள வேண்டும். இறைவன் எங்களுக்கு தமது துணையை அருள்வார்.



அன்புள்ள வாசக நேயர்களே!
உங்கள் அனைவருக்கும் எமது இயதம் நிறைந்த செபம் கலந்த கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துக்கள்.

## இறையியலாளர் இவ்விதழின் 26

அருட்சகோ. ஜெ. எல்மோ அருள்நேசன்

# புனித பொயிரியே கில்லறி

ஆரிய பேதகம் மிக ஆழமாக ஊடுருவி மேற்கத்தைய திருச்சபைக்கு மிகவும் சவாலாக தோன்றிய நான்காம் நூற்றாண்டுகளிலே புனித ஹில்லறி அவர்கள் 315ம் ஆண்டளவில் கோல் (Gaul) என்ற (தற்போதைய பிரான்ஸ் நாட்டில்) பொயிரியே என்ற நகரத்தில் பிறந்தார். பணம்படைத்த அவவிசுவாசிகளான குடும்பத்திலே பிறந்த இவரின் உண்மைக்கான தேடல் இவரை 345ம் ஆண்டளவில் ஓர் கிறிஸ்தவனாக மாற்றியது. சான்றுகளின்படி, இவரின் திருமுழுக்கினைத் தொடர்ந்து மக்களும் குருகுலத்தவர்களும் தங்களின் நகரத்தின் (Poitiers) ஆயராக இவரை ஏற்படுத்தினார்கள்.

திடமான போதனையாளராகவும் பேதகத்துக்கு எதிரான சம்மட்டியாகவும், நேரான சிந்தனைப் போக்குடையவராகவும், திகழ்ந்த இவர் "மேற்குலகின் அத்தனாசியார் என்று அழைக்கப்பட்டார்." செயற்றிறனிலும் நூல் ஆக்கங்களிலும் புனித அத்தனாசியாரை ஒத்தவராகக் காணப்படாத போதிலும் சிந்தனைப் போக்கிலும், ஆழ்ந்த அறிவிலும் மிகவும் வன்மையுடையவராகத் திகழ்ந்தார். இவரின் கருத்துருக்கள் மிகவும் உறுதியானவையாகவும் நகலற்றவையாகவும் இருந்தன. இவரின் சிந்தனைப்போக்கு மிகவும் உயர்ச்சியானது. மேலதிக விளங்கங்களுக்கு உட்படவேண்டியவை இலகுவில் புரிந்து கொள்ள முடியாதவை என புனித ஜேறோம் போன்ற இறையியலாளர்களால் வர்ணிக்கப்பட்டாலும் இறையியல் வினாக்களுக்கு இலத்தின் மொழியிலே பதிலிறுத்த முதல் (Gallic) ஆசிரியர் என இவரையே குறிப்பிடமுடியும்.

எழுத்துக்கள்

**1. தப்பறைக்கு எதிராக :**

1. மாற்கு நற்செய்தி விளக்க உரை (353-355)
2. திருப்பாடல்களின் விளக்க உரை (365)
3. யோபு நூலின் அடிப்படையிலான மறையுரைகள் (360)

**2. கொள்கை விளக்கங்கள்:**

1. திருத்துவம் (356-359):- கிறிஸ்துவில் இறை - மனித வெளிப்பாட்டினை தெளிவாக விளக்கும் இயல்
2. ஜேர்மனிய ஆயர்களுக்கான விளக்கவுரை
3. வரலாற்று நூல்கள் :- ஆரிய பேதக எழுத்தாளர்களினால் உருவாக்கப்பட்டு திரிக்கப்பட்ட வரலாற்று உண்மைகளை மீள் நிலைக்கு கொண்டு வரும் நூல்கள்.
4. கடிதங்களும் பாடல்களும்
5. கிறிஸ்தியல் கொள்கை திரட்டு

**உசாத்துணை**

*Tixeront J.* A handbook of Patrology, Herder book co., London , 1927, P.231.

Bardenhewer, Otto, Patrology trans., Thomas J. Shahan, D.D. St. Louis Mo, Berlin, 1908, P. 405.



# SYNOPSIS

## ST. PAUL

"...So, whether you eat or drink, or whatever you do, do everything for the glory of God..." (1Cor 10:31)

St. Paul, the apostle of the gentiles was born in Tarsus (A.D. 10) as a Benjaminite. He inherited Roman citizenship from his father. He learnt Greek education in Tarsus as a young boy and received Jewish education at the feet of Gamaliel, a grand Aramaic teacher. As a zealous Pharisee he followed the Moseic law meticulously. His ardent faith and love towards the Hebrew God(YHWH) made him angry against the Christians who claimed that Jesus of Nazareth was son of God and Lord (Kyrios) Thus he started his persecution on the Christians. On his way to Damascus to punish the believers, he was encountered by the Lord Jesus Christ. This encounter changed his life and Saul the persecutor became Paul the apostle. Jesus made him an instrument to preach the gospel to the whole world.

The Jewish idea of a selected race was replaced by Paul that all are called to the salvation of God, which is a free gift and can be received only by faith. Undergoing many hardships and trials, the love of God and his Good News were preached unto the 'ends of the world', Paul also used epistles as a means of preaching the message of Jesus and wrote many

letters to the churches of his time. Imprisoned in Jerusalem he was taken to Rome and was martyred there along with St. Peter. There are two sources in the Bible available for us to know about St. Paul: The Acts of the Apostles and the letters of St. Paul.

*M. Jegan Kumar Coonghe. OMI*

## PAUL'S IMPRESSIONS OF CHRIST

When we try to find out what Paul thought and believed about Jesus Christ, we must begin by remembering two things.

1) Paul was not a systematic theologian and he argued from experience.
2) There was nothing static about Paul's belief.
   He was forever faced with the ever moving and changing stream of human experience. He was forever involved in changing situations. The Damascus experience was not really a conversion of Paul, but rather, it was a transformation of Paul. His devotion and commitment to Judaism fully changed over to Jesus.

The experience with the risen Jesus on the road to Damascus radically changed the Jewish theology or rather the messianic theology of the Pharisee, rabbi, Paul. The whole plan of God for the salvation of mankind could be seen by Paul in a new light, illumined by the fact of the risen and glorified Jesus.

On the whole, the understanding of Paul about Christ is that God sent his son, who died as an expiation for our sins, and brought salvation in obedience to God.

*Rev. Bro. R. Robinson OMI*

# WHO ARE YOU LORD? THE SEARCH OF PAUL.

The question "who are you Lord?" which Paul asked at the gate of Damascus should be the question of everyone who seeks the renewal of faith. Paul had the constant yearning to know who Jesus was and that he asks " who are you Lord?". In the acts of the Apostles and in the letter to the Galatians these ideas recur quite often(Acts9;11). In constant search and in prayer only one can raise the question " who are you Lord?". For one to raise the question " who are you Lord?" in this world which is engulfed by modernism is very difficult. Paul's ideas regarding renewal are hidden in his missionary journeys. according to Paul the whole life depends in meeting the risen Jesus(1 Cor2;20).

What is needed for renewal is not human wisdom but the power of God. For our renewal the power of the risen Jesus is essential. Not only Paul's renewal but also the disciples' new life began with meeting the risen Jesus. We many a time tend to think that the renewal consists in knowing the historical Jesus, but for Paul the risen Jesus is the cause of Renewal (1Cor 15; 4-8).

*Rev. Fr. A. Robinson Joseph*

# ST. PAUL'S LEADERSHIP AND HIS MISSIONARY METHODS.

No missionary takes roots. He always seeks to hear God's call; almost, always through consolations and sentiments. likewise, the encounter with the risen Lord on the Way to Damascus, was indeed the turning point in Paul's life. In it, he "saw Jesus the Lord" (1Cor 9; 1). It was not a mere psychological conversion. Paul speaks of that experience as a revelation of the Son accorded him by the father (1 Gal 1; 16).

This Damascus experience radically changed the Jewish theology or rather the Messianic theology of Pharisaic Rabbi Paul. It really changed Saul the Pharisee into Paul the Christian; from a persecutor of the Christians to an apostle of Christ- the first Christian theologian too.

Paul's missionary activities and works are found in the narratives concerning his missionary journeys which he undertook during his missionary career. He had a strong faith and conviction in his special vocation and a clear idea about the particular ministry which was entrusted to his care. He dedicated himself completely to the divine will and depended very much on the guidance and direction of the Holy Spirit in his ministry. His leadership could be seen clearly during his treacherous journey to Rome. Though Paul travelled to Rome as a prisoner, the way he went about during the journey, the way he behaved, and the leadership he showed were remarkable. Thus, the way Paul went about that perilous journey, the leadership he practised and the missionary methods he followed were praiseworthy.

*A.J.A. Jeyaranjan*

## THE BASIC IDEAS WHICH SHAPED THE THEOLOGY OF PAUL

For the one who studies the theology of Paul for the first time or for a well versed theologian there may be many instances, where he is confused with the different or rich ideas of Paul. Here I try to give some basic guide lines to study his theology in an easy manner.

The encounter of the risen Lord, on the way to Damascus, changed all his theology and indeed he considered them as garbage (Ph3; 8). The

revelation of the glorified Jesus made him understand that man deserves nothing by his own merits from God. Salvation is a free and universal gift that is never acquired by law, but by faith in the crucified Jesus, now risen, who is Lord (Kyrios) and Messiah (christos)(Acts 23;6). The long awaited eschatological age has dawned, the satanic powers are defeated and the battle is won. The cross, which he considered as a curse and foolishness, became the power and atoning love of God, that reconciled man with God.

Thus, the Damascus experience of Paul not only changed his paradigm but compelled him to preach the gospel of Jesus to the Gentiles and he believed that this new mission is the will of God. "….. woe to me if do not proclaim the Gospel"(1Cor 9;16b).

*Rev. Bro. A. Justin.*

## அன்பான வாசக நெஞ்சங்களே!

எங்கே உங்கள் விமர்சனங்கள்
காலம் தாமதியாது எமக்கு எழுதி
அனுப்புங்கள்;
இறையியல்சார்பான
தெளிவின்மைகள் உங்களிற்கு
உண்டா? எழுதி அனுப்புங்கள்;
விடைகள் உங்களிற்குத்
தெரியப்படுத்தப்படும்.

நிர்வாகக் குழு.

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 26 முடிவுகள்

**சரியான விடைகள்:**

1. இடமிருந்து வலம்

9. கல்லறை
16. பாசறை
19. தீத்து
25. ஒலிவ
31. கடவுளாட்சி

1. மேலிருந்து கீழ்

6. வைகறை
8. ஒத்தமை
9. சிறை
17. பாஸ்கா
18. கருவறை
22. பவுல்

## பரிசு பெறுவோர்


[illegible] பரிசு [illegible]
திருக்குடும்ப கன்னியர்மடம்,
பருத்தித்துறை.

[illegible] பரிசு [illegible]
கச்சாய் வீதி,
கொடிகாமம்

[illegible] பரிசு [illegible]
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

## சரியான விடை எழுதி பாராட்டுப் பெறுவோர்

திரு. மு. முரளிதரன், கரவெட்டி.
செ. அனஸ்லி பிலிப், இளவாலை.
அ. சாளினி, நாவாந்துறை.
ஆசைமுத்து பகிதரன், நாவாந்துறை.
தொபியாஸ் டொறின் நிரோசா, பூநகரி.
பெ. சசின் றிசாந்தி, மாரீசன்கூடல்.
செ. பத்மநிதர்சன், போயிட்டி.
எஸ். அனுஷா, யாழ்ப்பாணம்.
செல்வி. பகீதா, முல்லைத்தீவு.



## குறுக்கெழுத்துப் போட்டி இல. 27

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | ╳ 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | ╳ 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

அனுப்புபவரின் பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

..............................

### இடமிருந்து வலம் :—

௧. பவுல் இவர்களுக்கும் திருமுகம் எழுதினார் (௬)

௨. பவுல் பிலிப்பியில் இதனால் பீடிக்கப்பட்ட சிறுமியை குணமாக்கினார் (௪) குழம்பியுள்ளது.

௧௩. நுணுக்கமாக யூத சட்டத்தைக் கடைப்பிடித்த இவர் குழம்பியுள்ளார் (௫)

௨௨. தமஸ்கு அனுபவத்திற்கு முன்பு இது பவுலுக்கு அவமானத்தின் சின்னமாக இருந்தது. (௩) (வலமிருந்து இடமாகவுள்ளது)

௨௫. பவுல் பேசிய மொழிகளின் ஒன்று (௫)

௩௨. உரோம் அக்கால கலாச்சார உலகின் இது என வர்ணிக்கப்பட்டது (௫)

மேலிருந்து கீழ் :-

1. இயேசு இறுதியில் .. தனக்கும் தோன்றினார் என்று பவுல் கூறுகிறார் (6)

4. தொடக்கம் (2) தலைகீழாயுள்ளது

6. பவுலின் பயணம் சைப்பிரசு தீவையும் கடந்து <u>இந்த</u> மாநிலத்தின் நகரங்கள் வரை செல்கிறது (5) தலைகீழாயுள்ளது)

15. திருத்தந்தையிடம் கேள்விகேட்ட இளைஞன் வாழும் இடம் (2)

⌘ விடை எத்தனை எழுத்துக்களால் ஆனது என்பதை அடைப்புக் குறிக்குள் உள்ள எண் குறிக்கும்.

⌘ விடைகளில் பல இவ்விதழின் கட்டுரைகளில் உள்ளன.

⌘ விடைகளை அனுப்ப மேலுள்ள கூப்பனை மட்டுமே பாவிக்கவும்.

⌘ விடை வந்து சேரவேண்டிய இறுதி நாள். **15-02-2008**

முகவரி

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 27**

இறையியல் கோலங்கள்,
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.



# அன்பான வாசகர் நெஞ்சங்களே.

உங்கள் கரங்களில் இறையியல் கோல சஞ்சிகை இலகுவில் கிடைப்பதற்காக நாம் சில இடங்களுக்கு முகவர்களை நியமித்துள்ளோம். இந்தப் பணியை ஆற்ற முன்வந்துள்ள இவர்களை அன்புடன் வரவேற்ப தோடு இவர்கள் பணிசிறக்க உங்கள் ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கும்படி அன்புடன் கேட்டு நிற்கின்றோம்.

நன்றி

– நிர்வாகக் குழு –

## முகவர்களாக

1. பாண்டியந்தாழ்வு, சுண்டுக்குளி – திரு. மரியநாயகம்
திருவழிப்பாட்டு நிலையம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

2. புனித நீக்கிலார் ஆலயம், நாவாந்துறை. – திருமதி. S. செல்வன்.

3. புனித மரியாள் ஆலயம், நாவாந்துறை. – செல்வி. ரூபா

4. இளவாலை – செல்வன். பே. றொனிபஸ்
மாரீசன்கூடல்,
இளவாலை.

5. குருநகர் – செல்வி. சகானா

6. கொய்யாத்தோட்டம் – செல்வி. ஜெயா

A.C.M. Press, No. 464, Hospital Rd, Jaffna. T.P. 021 222 9102

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 160/=

வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 16

Euro 14

தனிப்பிரதி 50/=



தொடர்பு கொள்க:

**இறையியல் கோலங்கள்**

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 222 2482, 021 222 7145



# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Quarterly

Annual Subscription: Local (Incl. postage) Rs. 160/=

Foreign (Incl. postage) U.S.$ 16

Euro 14

Single Copy Rs. 50/=



Correspondence to:

**Irai Iyal Kolangal**

St.Francis Xavier's Seminary

Columbuthurai, Jaffna,

Sri Lanka.

Tel: 021 222 2482, 021 222 7145



Registered No. QD/86/News/2007



Design Judeson